

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் வரலாறு



2018



# கரைச்சி புளியம் பொக்கணை

# நாகதம்பிரான் ஆலய வரலாறு

## தலபுராணப் பொழிப்புரையின் தொகுப்பு

வெளியீடு:
தர்மகர்த்தா சபையினரும்
பரிபாலன சபையினரும்
நாகதம்பிரான் ஆலயம்
புளியம்பொக்கணை

2018

# தலபுராணப் பொழிப்புரையின் தொகுப்பு


முதற்பதிப்பு - 2012

இரண்டாம் பதிப்பு - 2013


மூன்றாம் பதிப்பு - 2014

நான்காம் பதிப்பு - 2015

அமரர் குமாரசாமிப் புலவர் குடும்பம்

ஐந்தாம் பதிப்பு - 2017

ஆறாம் பதிப்பு - 2018



பாலும் பழமும் வைக்குமிடம்

# முன்னுரை

## விநாயகர் துதி

அறுகோடு அருமலர்கள் தூவி நிதம் அர்ச்சித்து
குறுமுனி போல்கும் பிட்டுப் பணிகின்றேன் – அறுமுகனண்ணனே!
உருவதனில் அரவான தம்பிரான் கதை பகரத்
திருவருள் நல்குவாயே

ஐங்கரப்பிள்ளை யாமெனு மாச்சகர்
தங்கள் நாகதற் தம்பிரா னாயருள்
புங்கவற்கோர் புராண மமைக்கென
விங்கெ மக்கிசைத் திட்டதி னோதுகேன்

இது தலபுராண ஆசிரியரின் முகவுரைக்கவி இதன்படி நாகதம்பிரான் ஆலயத்தின் பிரதம பூசகர் அமரர் நாகமுத்து வீரகத்திப்பிள்ளை (ஐங்கரப்பிள்ளை) அவர்களின் பெரு விருப்பத்திற்கு அமைவாக புளியம்பொக்கணை தலபுராணம் 1960 ஆம் ஆண்டு குடாரப்பூர் வைத்தியர் செல்லப்பா கணபதிப்பிள்ளை அவர்களால் பாடப்பட்டு வெளியிடப்பட்டது. பின்பு 1968 ஆம் ஆண்டு அவரது புதல்வர் சிவ அன்பன் அமரர் கணபதிப்பிள்ளை குமாரசாமி அவர்களால் உரையுடன் புத்தகமாக வெளியிடப்பட்டது. அதன் பின்பு 1994,2006 களில் மீள் பதிப்புச் செய்யப்பட்டது.

இம்முறை நாகதம்பிரானின் வரலாற்றை வசன நடையில் வெளியிட வேண்டும் என்பது பலரது விருப்பம். இதற்கமைய ஆலய பரிபாலன சபையின் தலைவர் திருவாளர் வீரகத்திப்பிள்ளை இராமநாதன் அவர்களின் வேண்டுதலுடன் அனுமதியும் கிடைத்தது.

இதன்படி சுமார் நாநூறு வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் புகழ் கொண்ட தெய்வத்தின் திருவருள் திறனைச் சொல்வதற்கு முற்பட்டேன். அதுவும் ஆதாரமாக நூல் ஒன்றையும் வைத்துக் கொண்டேன். எனினும் இதை எழுதி முடிப்பதற்குள் மிகுந்த சோதனைகளுக்குள்ளானேன். எம் பெருமான் தலபுராணத்தை திருக்கதவடைப்பு நாளன்றும் திருக்கதவு திறப்பு நாளான

தைப்பொங்கல் நாளன்றும் படித்துப் பயன் உரைப்பவர்களில் நானும் ஒருவன் என்பதால் புராணத்தின் உட்பொருளை ஓரளவு அறிந்திருந்தேன். தைப்பொங்கலன்று தலபுராணம் படித்தபின்பு ஆலயத்தின் பிரதமகுரு ஆசி தந்து காளாஞ்சி கொடுத்தார். அதையே குருவின் ஆசியாகப் பெற்றுக்கொண்டேன்.

எழுதத் தொடங்குவதற்கு முன்பும் எழுதுகின்ற போதும் கற்பக விநாயகரையும், நாகதம்பிரானையும், சிவபார்வதியையும் அடிக்கடி பல தடவை வணங்கினேன். திருவருளையும் அருட்கடாட்சத்தையும் பெற்றுக்கொள்வதற்காக, எனினும் அதிசயச் சருக்கம் எழுதுகின்ற போது என்னை அறியாமலே மெய் சிலிர்த்தது. கண்களில் நீர் சொரிந்து விட்டது. புராணத்தின் பொருளைத் தொகுத்த போது பொருத்தமான இடங்களில் விரித்துரைத்துள்ளேன். சொற்பதங்களில் தவறுகள் ஏற்பட்டுள்ளதோ தெரியவில்லை. எல்லோரும் இலகுவாக வாசித்து எம் பெருமானின் வரலாற்றுக் கதையை அறியவேண்டும் என்பதற்காக சாதாரண உரைநடையில் எழுதுவதாக உணர்கின்றேன்.

தவறுகளைத் தவிர்த்து திறமையைச் சேர்த்து இச் சிறு மலரை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றேன்

**இங்ஙனம்**
**மயில். வேலாயுதபிள்ளை**
**புளியம்பொக்கணை.**


சுப்பிரமணியம் பூசகர்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜாக்குருக்கள்

நாகதம்பிரான் கோயில்
புளியம்பொக்கணை

## ஆசியுரை

குபேரதீவு என வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் வட பகுதியிலே அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்திலே கரைச்சிப் பிரிவிலே புளியம்பொக்கணை என்னும் கிராமத்தில் மிகவும் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமாகச் சிறந்து விளங்கும் கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் தலபுராணம் என்னும் இந்நூல் மீள் பதிப்பாகவும், அடியவர்கள் நாகதம்பிரானின் அதி அற்புத அவதாரத்தையும் எளிதில் புரியக்கூடிய வகையிலும், மிகவும் எளிமையுடன் வெளிவருவதற்கு எனது நல்லாசிகளும் எல்லாம் வல்ல நாகதம்பிரானின் திருவருளும் கூடவே கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

### மெய்யடியார்களே!

இது "புத்தகம் அல்லபுத்தகம்" இப்பிரபஞ்சத்தில்ஒவ்வொருவிநாடியும் ஒவ்வொரு அற்புதம் எங்கோ ஒரு மூலையில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அவ்வகையில் எங்கள் இவ் ஆலயத்தின் நிகழ்வும் அரும்பெரும் பழமை வாய்ந்ததும், புதுமையானதும், அற்புதம் நிறைந்ததும் ஆகும்.

இந் நாகதம்பிரானின் அதி அற்புத நிகழ்வினை பாமரரும் உணரும் வகையில் மீள் உருப்பெறும் வகையில் இந் நூல் "புத்தகம் அல்ல புத்தகம்" என்பதை எல்லோருக்கும் உணர்த்துவதோடு அதையு ணர்ந்து பலன் பெறவும் வழியமைக்கும். அற்புதத் தலபுராணம் அடங்கிய இம்மலர், எல்லோருடைய இல்லங்ளிலும் இருக்க வேண்டிய "இறையருள் ஒளி" என்பதையும் தெரிவித்து இம்மலரானது எல்லோர் கரங்களிலும் சிறப்புற மலர்ந்து, இத்தலபுராணம் சிறந்து விளங்க எனது நல்லாசிகளைக் கூறி அமைகின்றேன்.

நன்றி
வாழ்க வையகம் தொடர்க நற்பணி

பிரதம குரு
சாம ஸ்ரீ தேசமானிய
சிவாகமகிரியா பூஷணம்
சிவ ஸ்ரீ அமிர்த. ஸ்ரீஸ்கந்தராஜாக்குருக்கள்



**புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**
**"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"**

எம் பெருமானின் நல்லருள் வேண்டி ஆலயத்தின் பிரதம பூசகராகவும் தர்மகர்த்தாவாகவும் ஆலய ஸ்தாபகருமாக இருந்து இறைபதம் எய்திய எனது தந்தையார் அமரர் நாகமுத்து வீரகத்திப் பிள்ளை (ஐங்கரன்) அவர்களின் காலத்தில் இத்தலபுராணத்தை அவரின் ஆலோசனைப் படி அனுமதிப்படி குடாரப்பூர்க குமாரசுவாமி புலவர் அவர்களால் பாட்டும் பயனுமாக வெளியிடப்பட்டது. ஆலயத்தின் தல புராணத்தை இப்போது தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபையினர் முயற்சியினால் கதைவடிவமாக எழுதப்பட்டு அடியவர்கள் எம் பெருமானின் அற்புதத்தை அறியும் பொருட்டு விளக்கமாக பிரசுரித்து வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். இவ்வருட ஆண்டு பொங்கல் விழாவிலே இந்த வரலாறுப் புத்தகத்தை வெளியிட்டு எல்லாம் வல்ல நாகதம்பிரான் நல்லருளை பெறுவோமாக.

**இவ்வண்ணம்,**
**வீ.இராமநாதன்,**
**தலைவர் தர்மகர்த்தா,**
**நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை.**

## தலபுராணக் காப்பு

திங்கள் சேர்சடை யந்திரி யம்பக
முங்கு லாவுகை மோதக முந்திரு
மங்க லந்திகழ் மார்பும் மனத்துகந்
துங்க வைங்கரன் சேவடி போற்றுவாம்

திருவுலாவிய சென்னிற் கொன்றையும்
மருவு வில்வமும் மத்தம் மதியமும்
பெருகு மானதி யும்புனை பிஞ்ஞகன்
இருபதாம்புய மேத்தி யிறைஞ்சுவாம்

இன்ன லின்ப மிரண்டினுக் கீடதாய்த்
துன்னு மாருயிர்த் தோற்ற மனைத்தையும்
அன்னை யாகி யளித்தரு ளம்பிகை
பொன்னலர்ப்பதம் போற்றி வணங்குவோம்

நன்னெறி யுலவும் நீதி நாயக முதலியாரின்
பன்னியின் கர்ப்பந் தன்னிற் பாம்புருவாகத் தோற்றிப்
பின்னமி லன்பர் போற்றப் புளியம் பொக்கணையில் வைகித்
தன்னருள் புரியும் நாக தம்பிரான் தாளிற் தாழ்வாம்



## நாகதம்பிரான் வேறு

நன்நெறியுலவும் நீதி நாயக முதலியாரின்
பன்னியின் கர்ப்பம் தன்னிற்பாம்புரு வாகத் தோற்றி
பின்னமி லன்பர் போற்றப் புளியம் பொக்கணையில் வைகித்
தன்னருள் புரியும் நாகதம்பிரான் தாழிற் தாழ்வாம்

# புராதன கரைச்சியின் சிறப்பு

நாலு திசையும் பெரும் சமுத்திரத்தால் சூழப்பட்டு, இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கபடுகின்ற இலங்கை என்ற ஈழ நாட்டின் வடபால் அமைந்த மணல் திடலான யாழ்ப்பாணம் என்பது, ஒரு பெரும் பிரிவாகவும், இதனுள் பதின்மூன்று உட்பிரிவுகளும் வகுக்கப்பட்டிருந்தன. இங்கே பெரும்பிரிவு என்பது மாகாணம் அல்லது மாவட்டம் என்றும், உட்பிரிவு என்பது கோயில் பற்று அல்லது மணியகாரன் பகுதி என்றும் அழைக்கப்பட்டன. இந்தப் பதின்மூன்று உட்பிரிவுகளில் கரைச்சி என்பதும் ஒரு பிரிவாகும். இந்தக் கரைச்சிப் பிரிவானது இயற்கையின் பலவளங்களையும் ஒருங்கே பெற்று, பார்ப்போர் மகிழும் வண்ணம் சிறந்து காணப்பட்டது. இதனால் இந்தக் கரைச்சிப் பிரிவு மற்றைய பிரிவுகள் யாவற்றிலும் மேலாகத் திகழ்ந்தது.

கரைச்சிப் பகுதியில் வடக்குப் பக்கமாக சமுத்திரம் போன்ற ஆழமுடைய கழிக்கடலும், மற்றைய மூன்று திசைகளிலும் பெரிய குளங்களும் பாயந்து ஓடுகின்ற பெருத்த ஆறுகளும், ஒரு நாட்டின் எல்லைகளில் வெட்டப்படுகின்ற அகழிகளைப் போன்று எல்லைகளாக அமைந்துள்ளன. இன்னும் பாலை, நாவல், வேம்பு, புளி, முதிரை, பனிச்சை, ஆல், ஆத்தி, கருங்காலி, தேக்கு, இலுப்பை முதலிய பெரு மரங்களும் அழகிய மலர்களையுடைய குருந்து, காஞா செழுமலருடைய கொன்றை போன்ற மரங்களும் நாலாதிக்குகளிலும் அடர்ந்து வளர்ந்து, மதிலைப் போன்று காட்சி தருகின்றன. நல்ல மரங்கள் நிற்கின்ற நாடே நன்நாடு என்று ஆன்றோர் கூறுவதால் ஈடிணையற்ற மகோன்னதனமான நாடென்று கூறப்படுகின்றது இந்தக்கரைச்சிப் பகுதி.

நால்வேதம் ஓதி அறுதொழில் செய்வோர்தான் அந்தணர். அங்கே கரி என்ற பஞ்சம் வராது என்பது சாத்திரம். இப்படியான அந்தணர்கள் இருக்கின்ற அக்கிரகாரம் என்று சொல்லப்படுகின்ற இல்லப்பகுதிகளும் அரச பணியாளர்கள் வாழ்கின்ற இடங்களும், தமது பொருட்கள் போல் பிறர் பொருளையும் நிறுத்து வாங்கி விற்று வியாபாரத் தொழில் செய்கின்ற செட்டி மக்கள் வாழ்கின்ற இடங்களும் குற்றமற்ற வேளாண் தொழிலைச் செய்வதால்

வேளாளர் என்று அழைக்கப்படும், நில மடந்தைப் புதல்வர்கள் வாழ்கின்ற இடங்களும், இந்தப் பகுதியில் நெருக்கமாக காணப்படுவதுடன் மேல் மாடங்கள், மண்டபங்கள், வீடுகள், மற்றும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், நாடகசாலைகள், நல்ல உணவுப் பொருட்கள் விற்கப் பெறுகின்ற வியாபாரசாலைகள் வீதிகள் தோறும் ஆங்காங்கே காணப்படும்.

இங்கே பசுவினங்களும், ஆடுகளும், எருமைகளும் இன்னும் மான் கூட்டங்களும், மரைகளும், யானைகளும், புலிகளும், குரங்குகளும், பன்றிகளும் வலிய கரடிகளும், முயல்களுமாகிய மிருகங்கள் காட்டினது பிள்ளைகள் போல எவர்களும் காணும்படி எவ்விடத்திலும் கூச்சமின்றி உலாவும் இதைப் பார்க்கில் நல்ல நீதிவாய்ந்த நாட்டில் புலியும், மானும் ஒரே நீர் நிலையில் நீர் குடித்துச் செல்லுமென்ற சாத்திரம் சொல்லும் உண்மையை கரைச்சிப் பகுதியில் காணக்கூடியதாக இருக்கும்.

இங்கே வருடா, வருடம் வரைவின்றி மழை பொழிவதால் வயல் நிலங்கள், வாய்க்கால்கள், ஆறுகள், அளவக்கைகள், கிணறுகள், குளங்கள், ஏரி, நீரோடைகள், மடுக்கள், குன்று, குழி எல்லா இடங்களிலும் தண்ணீர் தேக்கமுற்றுக் காணப்படும். மன்னர் செங்கோல், ஆலயதர்மம், மாதர் கற்பு என்பன நெறிதவறினால் மழை பெய்யாது என்பது சான்றோர் வாக்கு.

தென்னை, பனை, மா, பலா, கமுகு, நல்லகரும்பு, வாழை என்பன இங்கே காடுபோல் செழித்துப் பல்கிப்பெருகி இருப்பதால் இங்கு வாழ்பவர்கட்கு எக்காலமும் பஞ்சமும், துன்பத்துக்கு இடமாகிய வறுமையும் வராது என்று கூறப்படுகின்றது. இதனால் பஞ்சமா பாதகங்கள் போன்ற குற்றச் செயல்கள் கரைச்சியிலே இல்லை என்றும் கூறப்படுகின்றது. அத்தோடு எள்ளு, வெண்தினை, கருந்தினை, சாமை, உழுந்து, கொள்ளு, சோளம், கடலை, வரகு, குரக்கன், மொச்சை, பயறு, துவரை, அவரை, இறுங்கு போன்ற சிறுதானியங்கள் கரவில்லாது விளைகின்ற மேட்டு நிலங்களும் நிறையவே உண்டு.

இங்குள்ள இல்லங்களில் ஆடவர், மகளிர் கூடி மகிழ்ந்து பாலும் தேனும் போல வாழ்வதை மகாவிஸ்ணு மூர்த்தியும், மகாலட்சுமி

தேவியும் கூடி இருப்பதற்கு உவமித்துக் கூறப்படுகின்றது. இங்கே ஆதியந்தமில்லாத விநாயகப்பெருமானது திருக்கோவில்களும், ஒளியினையுடைய ஆறுமுகப் பெருமானது திருக்கோயில்களும், பத்தினி கண்ணகை, வீரபத்திரர் மற்றும் வைரவப் பெருமானது ஆலயங்களும் ஆங்காங்கே காட்சி தந்து நல்ல திருவருள் பாலித்துவருகின்றன.

இயல்பு முறையான சாதியத்தின் படி, கடற்றொழில் செய்பவர்கள் நிறைந்து வாழுகின்ற இடம் ஒரு பக்கமாகவும், நாவிதர், நீரங்கோலியர் போன்றவர்கள் வாழுமிடம் ஒரு பக்கமாகவும் தொழிலாற் பெயர் பெற்ற கொல்லர், தச்சர், குயவர் வாழ்கின்ற இடங்கள் ஒரு பக்கமாகவும், மற்றும் கன்னார், பொற்கொல்லர், சிற்பியர் வாழ்கின்ற இடங்கள் ஒரு பக்கமாகவும், விளங்குவதோடு பிராமணர், இரப்போர், வறியவர், முதியவர், ஆண்டிகள், சந்நியாசிகள், சங்கமர்கள், தந்தை தாய் இழந்தவர்கள், மனைவி இழந்தவர்கள், தகுந்த தொழில் இல்லாதவர்கள் யாரேனும் இந்த நல்ல கரைச்சிப் பகுதிக்கு வந்து தங்கள் தங்கள் விருப்பம் போல பொருள் பண்டங்கள், நல்ல விளை நிலங்கள் என்பவற்றைச் சம்பாதித்து நிரந்தரமாகவே குடியேறி வாழ்கின்ற இடம் என்பதனால் இது போன்று வேறு இடம் எங்கும் இல்லை என்றே சொல்லப்படுகின்றது.

இங்குள்ளவர்கள் நினைத்த காரியங்கள் வெற்றி பெறும் பொருட்டு தங்கள் குல தெய்வங்களுக்குத் தினந்தோறும் செய்கின்ற அபிஷேக ஆராதனைகளுடன் கூடிய பூசை பெருந் திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகள் செய்பவர்களது பக்தி மேலோங்கிய சத்தமும், அறிவாளிகளால் வியந்து பேசப்படுகின்ற செல்வந்தர்களின் வீடுகளில் இசைபாடுகின்ற வானொலிகளின் சத்தமும், சிறுவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளில் இருந்து வெளிப்படுகின்ற சத்தமும், வீதிகளிலே ஓடுகின்ற வாகனங்கள் மற்றும் இயந்திர சாதனங்களினது சத்தமும், எப்பொழுதும் எல்லா இடங்களிலும் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

நீர் அணைகளில் நீரை மறிப்பதும், வயலின் வரம்பு வாய்க்கால்கள் கட்டுவதும், பருவம் பார்த்து நிலத்தை உழுது பண்படுத்துவதும் பயிருக்குத் தக்கபடி நீர்பாய்ச்சுவதும், நெற்பயிரை வளரவிடாது தடுக்கின்ற புற்களைப் பிடுங்குவதும், விளைந்த நெற்பயிரை அறுவடை செய்வதும் சூடு வைத்துக் காலத்துக்கு ஏற்றப்படி மிதிப்பதும் போன்ற கமவேலைகளை இப்பகுதியில் உள்ளவர்கள் தவறாது செய்து வருவார்கள்

# புனிதமான ஊர்

சொல்லப்பட்ட சகல வளங்கள் நிறைந்து, சிறந்த கரைச்சி என்ற பெண்ணானவள், நெருங்கிய சிறப்பமைந்த யாழ்ப்பாணம் என்ற தலைவனைச் சேர்ந்து முன்னமே பெற்ற பிள்ளைகள் என்று சொல்லப்படுகின்ற கரைச்சியின் உட்பிரிவுகள் பதினெட்டில் மூத்த பிள்ளையாகக் கருதப்பட்டு உயர்ந்துள்ளது புளியம்பொக்கணை என்ற ஊர்.

இந்தப் புளியம்பொக்கணை ஊரிலே அரிய கல்விமான்களும், அதிக நன்மையுடைய பணக்காரரும், நெற்காணிகள் தொகையாக உடைய நிலச்செல்வந்தர்களும், இராசாக்களைப்போல சகல ஐஸ்வரியமும் பெற்று இல்லங்களில் வாழ்வார்கள். பயமுற்றவர்கள், சந்தேக விபரீதந் தீரக்கல்லாதவர்கள், பிச்சைக்காரர்கள், அகப்பிரமம் கொண்டவர்கள், இழிந்த வார்த்தைகள் பேசுகின்றவர்கள், குடிவெறியினையுடைய கோளர்கள், இந்தப் புளியம் பொக்கணை ஊரில் இருப்பது அருமையாகும். பல்வகை திருத்தம் மிகுந்த இந்தச் சிறந்த புளியம்பொக்கணை ஊரில் இருக்கும் வயோதிபர், வாலிபர், மிருதுவான தித்தித்த வதனத்தினையுடைய பாலகர்கள், இலட்சணம் பொருந்திய மங்கையர்கள், புத்தி கூர்ந்த கன்னியர்கள், முடிவில்லாத சூரியதேவன் உதிப்பதற்கு முன்பாக நித்திரை விட்டெழுந்து, அன்றாடம் செய்கின்ற கடமைகளை முடித்துக்கொண்டு தங்கள் குல தெய்வங்களை வணங்குவார்கள். அதன் பின்னர் சூரியன் உதித்துவர அன்புபூண்ட, விசுவாசமுள்ள மனத்தோடு நல்ல பாத்திரங்கள், தகுந்த பொருட்கள் என்பவற்றை விளக்கிச் சுத்தம் செய்து, தோண்டப்பெற்ற நீர் நிலைகளில் போய் வஸ்திரத்தோடு நீராடுவார்.

இன்னும், இல்லங்களில் உள்ள முற்றம் வீடு என்பவற்றை கூட்டிச் சுத்தம் செய்து, களிமண் கலந்த சுத்தமான பசுவின் சாணத்தினால் மெழுகி, தோய்த்துலர்ந்த ஆடைகள், ஆபரணங்கள் அணிந்து வந்து ஒரு வித துன்பமுமின்றி அமுதுடன் கறிவகைகளையும் சமைப்பர். சமைத்த அமுது கறிவகைகளை தங்கள் சிறு பிள்ளைகளும் உடனிருந்து உண்ணும்படியாக நல்ல முகமலர்ச்சியோடு இனிய வார்த்தைகளைப் பேசி கணவனுக்கு உணவு பரிமாறி, அவர்கள் உண்டபின்னே தாமும் உணவருந்தி பெரும் புகழ் அடைவர். இன்னும்

வீட்டின் கண்ணே புதிதாக அறியாதவர்கள் யார் வந்தாலும் தகுந்த நல்ல வார்த்தைகள் கூறி, அகமகிழ்ந்து அவர்களையும் தம் உறவினராக நினைந்து அமிர்தத்தையொத்த சுவையான உணவுகளை வழங்கி, இன்புற்று வீட்டுக்கு யாசகத்திற்காக வருகின்ற சங்கமர் என்ற வீரசைவர்கள், பரதேசிகள், பண்டாரிகள், சந்தியாசிகள், தவசிகட்கெல்லாம் நல்ல அரிசியும், நெல் என்பவற்றையும் அள்ளிக்கொடுத்தும் உணவு கொடுத்தும் மகிழ்வார்கள் இவ்வூர் பெண்கள்.

இன்னும், அவர்கள் மாதம் தோறும் வருகின்ற சூதகம் என்ற வீட்டு விலக்கான நாளில் யாருடனும் பேசாமல் ஒதுக்கமான இடத்தில் இருப்பார்கள். ஏனெனில் அன்பு பொருந்திய நாயகன் கண்டால் வரப்போகின்ற தோசத்திற்கு தாங்கள் ஆளாகநேருமென்ற சாத்திரமுறைகளைக் கடைப்பிடித்தே. அது மட்டுமல்ல, சொன்ன நான்கு நாட்களும் கழித்து ஐந்தாம் நாள் நீரில் மூழ்கி நாயகர்க்கு சுத்தமாகிய பின்பு அந்நியர்கள் மற்றும் தினமும் பழகியவர்களைப் பாராது தம் கொழுநனையே முதலில் பார்ப்பர். சொந்த நாயகன் தூரதேசங்கள் சென்றிருந்தால், முடிவில்லாத பேரழகினுடைய சூரியதேவனைப் பார்ப்பார்கள். இது ஏனெனில் அந்த மாதத்தில் கற்பமுற்றால் முதலில் காண்பவர் போலவே, குழந்தை கருவில்லமையும், அதனால் தீராத வசைவந்திடும் என்ற முன்னோர் முறைமையை உணர்ந்தேயாகும்.

இங்குள்ளவர்கள் குளக்கரைகளில் பசுக்கள் உராய்வதற்காக ஆவுரசிக்கல் என்ற கல்லு நாட்டுதல், பாழடைந்த கோயில்களைத் திருத்தியமைத்துப் புனருத்தாரணம் செய்தல், பூஞ்சோலைகள் அமைத்தல் கோடைகாலங்களில் குளங்கள் வெட்டுதல் ஆகிய தர்மகாரியங்களை தொண்டாகச் செய்வதே, பிரதான தொழிலாகக் கொண்டார்கள். அதுமட்டுமல்லாது, தாங்கள் அனுஷ்டிக்கும் சைவசமய முறைமையை அறிந்து, சந்திரனையணிந்த சடாமுடியினையுடைய சிவபெருமான், உமாதேவியார், பேரொலி பொருந்திய வேற்படையுடைய முருகப்பெருமான், விநாயகப் பெருமான், வீரபத்திரர், வைரவர், கண்ணகை ஆகிய தெய்வங்களின் விரதங்களைத் தவறாமல் அனுஷ்டித்து தேவாலயங்கட்கு உரிய

காலங்களில் பொங்கல், பூசை, திருவிழா, பெருவேள்வி போன்றவற்றை சங்கமென ஒன்று கூடித்தவறாமல் செய்து வருவார்கள். அது மட்டுமன்றி, வேற்கரநாதராகிய கந்தப்பெருமானது கந்த புராணத் தையும், முறை வழுவாது வருடந்தோறும் படித்துப் பயனுணர்ந்து வருவார்கள். இப்படிச் சிறப்புக் கொண்ட ஊரில், நான் முகத்தினையுடைய பிரம்மதேவரும், அரியவராகிய சிவபெருமான் அருளினால் பாம்பு வடிவமாய்ப் பெண் வயிற்றில் அவதரித்து, தெய்வீகமாக மாறி இந்த ஊரிலே ஒரு தேவாலயம் உண்டாகும். அதைப் பார்ப்பேனென்று நினைத்து தீமைகளை நீக்கி மிகவும் பரிசுத்தமாய் இருந்தது, அதுவே புளியம்பொக்கணை ஊர்.

இரும்பு, பொன், வெள்ளி ஆகிய கோட்டைகளை வைத்துக்கொண்டு அசுரர்கள் தேவர்களுக்கு தீமை செய்த போது, அவற்றை எரித்து தேவர்களைக் காப்பாற்றிய முப்புரதகனராகிய பரமசிவன், பாம்பு வடிவம் கொண்டு இந்த இடத்திற்கு வருவார். அவருக்கு இருக்க இடமும், உண்பதற்கு பாலும் பழமும் நானே கொடுப்பேன் என்பது போல நல்ல கொம்பர்களைப் பந்தர்போல பரப்பி நிற்கின்ற அந்த அரச மரமும், சிரசின் மேலேயுள்ள கங்கையை சிவபிரான் திருக்கண்ணால் அவதாரம் செய்து அனுப்பி வைத்தாற் போல தென்கிழக்குத் திசையில் நல்ல திருக்குளமும் அமைந்திருக்க, இவ்வூரில் சமய விதிமுறைகளில் குறையேதும் இல்லாமல், வேளார்களும், வன்னிய குலத்தவர்களும் ஒன்று சேர்ந்து பெருமையோடு வாழ்ந்தனர்.

# திரு அவதாரம்

சொல்லப்பட்ட இவ்வளங்களில் சிறந்த புளியம்பொக்கணை என்ற நல்லூரோடு ஒன்றிணைந்த, கொழுந்துப்புலவு என்ற சிற்றூரில் பிரிவில்லாது வாழ்கின்ற வன்னியவேளாளர்கள் அனைவருக்கும் ஓர் முதல்வனாகி, முதலியார் பட்டம் பெற்றவராகி ஆதிமூர்த்தியாகி பரமசிவனின் நல்லருள் பெற்று நன்மையாகிய கதைகள், ஆகமங்கள் என்பவற்றை சந்தேகமற கற்று, பேரறிவினையுடையவராகி நீதிநாயக முதலியாரென்ற பொலிவாகிய பெயரைப் பெற்று பகைவர்களும் வியக்கும் பொருட்டு வேளாளர்களுக்குரிய முதன்மைச் சிறப்பான ஏர்ச்சீரோடு வாழ்ந்து வந்தார்.

இவர் அளவற்ற நெற் கழனிகளும் ஆடு, மாடு, எருமைகளும் எவ்வளவு பெரிய வேலையானாலும் மிகவும் விரைவாகச் செய்து முடிப்பதற்கேற்ற, வேலையாட்களும், குடிமக்களும் ஒருசேர திறமையினாலே சம்பாதிக்கப்பெற்ற பல்வகைத் திரவியங்களுமாகிய, பதினாறு வகைச் செல்வச் சிறப்பையும் ஒருங்கே பெற்று விளங்குவதனால், நீதிநாயக முதலியாருக்கு நிகராக எவரையும் எடுத்துச் சொல்லமுடியாது. சத்தியத்திற்கு நல்ல அரிச் சந்திரனையும், செல்வவளத்திற்கு குபேரனையும், பொருட்களைத் தர்மஞ்செய்வதில் கர்ணனையும், வலிமையான வீரத்திற்கு அனுமானையும், பார்க்கின்ற பேரழகிலே மன்மதனையும், அடைந்தோரைக் காப்பதில் நெடிய மகாவிஸ்ணு மூர்த்தியையும், பொலிவாகிய அன்பாதரவில் யமபுத்திரனாகிய தர்மராசானையும், நிகர்த்து விளங்கினார்.

இப்படியான உயர்ந்த நிலைமை பெற்று வாழ்கின்ற சிறப்பைக் கண்ட அவர்களது சுற்றத்தவர்களிலே மூத்தவர்கள் ஆராய்ந்து அறிந்து சொல்லப்பட்ட முறை, நிறை நீதியுடனொத்து விளங்குவதும், இவருக்குச் சமமாகிய வன்னிய மரபிலே உள்ளவருமாகிய கமலம் என்னும் பெயருடைய கன்னிகையை அக்கினிசாட்சியாக வைத்து விவாகம் செய்து பிரிவில்லாமல் இருந்தார்.

இதை உவமித்துச் சொல்வதனால் இரண்டு உடலிற்கு ஒருயிர் போலவும், இரவும், பகலும் நீங்காத காதலுற்று மன்மதனும், ரதியும் போல இன்பம் அனுபவித்து வாசனையுடைய மலரும் மணமும் போல

ஒன்றிணைந்து வாழ்ந்தார்கள். நீதிநாயக முதலியார் தான் சம்பாதித்துச் சேர்த்த செல்வத்தாலும், பிதா, மாதா கொடுத்த முதுசொத்தாலும் மனைவியின் சீதனப் பொருட்களாலும், இன்னும் பல வித வருவாய்களினாலும், அரசனைப் போல செல்வத்தை அனுபவித்தார். எனினும் பிறிதொரு காரியத்தை நினைந்து மனதிலே பெரும் கவலையடைந்தார்.

பொருட்செல்வத்தால் குறைவில்லை, சாதியிற்குறைவென்ற துன்பம் இல்லை. இனத்தவர்களால் இடரில்லை, பகைவர்களாலும் துயரமில்லை எனினும், நாம் விவாகம் செய்து இவ்வளவு காலமும் நடாத்திய இல்லற வாழ்வில் கண்டசுகம் ஒன்றும் இல்லை என்று மனதில் நினைந்து பெரிய துன்பக் கடலில் வீழந்தார் நீதியாக முதலியார்.

அந்தப் பெருந்துன்பம் யாது எனில், அளவில்லாத பெருஞ்செல் வத்தை தனக்குப் பின் அனுபவிப்பதற்கும், இக்காலத்தில் மழலை மொழிகேட்டு இன்புறுவதற்கும், சந்ததி பெருகுவதற்கும், தகுந்த புத்திர பாக்கியம் இல்லாததேயாகும். இதனைப் பசிய வளையல் களையணிந்த கைகளையுடைய மனைவியாகிய கமலம் அம்மையாரிடம் சொல்லுகின்றார் பின்வருமாறு.

பெண்ணே! நாம் திருமணம் செய்து, இது நாள்வரையும் இல்லற இன்பம் குறைவின்றி அனுபவித்தோம். எமக்கு இறப்பு வரும் காலத்தில் ஈமக்கிரியை முதலான கடமைகளைச் செய்வதற்கேற்ற புத்திரப் பேறில்லையே இதனால் இந்த இல்வாழ்வில் என்ன சுகத்தை கண்டோம். ஒன்றுமில்லையே பசுவதை செய்தேனோ? வீட்டில் அடைக்கலம் என்று வந்தவர்கட்கு துன்பம் செய்தேனோ? அல்லது நல்ல பூங்காவினை வெட்டி அழித்தேனோ? நல்ல கலைஞானங் களைக் கற்றுணர்ந்த வித்துவான்களை நிந்தித்தேனோ? மா வடுவையொத்த கூரிய கண்ணினையுடைய கன்னிப் பெண்ணின் கற்பை அழித்தேனோ? தேவர்களிடத்தே பழியைப் பெற்றுக் கொண்டேனோ? இப்படியான பாவங்கள் எதையுமே நான் செய்யவில்லையே. கொலை முதலான பஞ்சமா பாதகங்களையும், குலதெய்வங்களிடத்தில் பொய்ச் சத்தியம் செய்தல், போன்ற பழிகளைச் செய்த பாவத்தினால், புத்திர பாக்கியம் இல்லாமல்

போகலாம். ஆனால் நாம் செய்தது ஒன்றுமில்லையே என்றால், முற்பிறவியிலே செய்த பிராரத்துவம் என்ற வினையேயல்லாமல் இப்பிறப்பிலே நானறியச் செய்த பெரும் பாவங்கள் ஒன்றுமில்லை ஆகவே, எமக்கோர் புத்திரன் பிறக்க வழி சொல்லு என கற்புடைய மனைவியான கமலம் அம்மையார் யோசித்துக் கூறுகிறார்.

ஐயா! கல்வியறிவு குறைந்த மாந்தர்களைப் போல உள்ளம் கலங்குவது அழகல்ல. எமது இந்தச் சிறிய துன்பம் நீங்க வேண்டுமெனில், சிவபெருமான் உமையம்மையாரினது செந்தாமரை மலர் போன்ற பாதங்களில் நல்லமணம் பொருந்திய மலர்கள் தூவி வணங்கி, நல்ல விரதங்களை முறைதவறாது அனுஷ்டித்தால் வருகின்ற பாவங்களை நீக்கி புத்திர பாக்கியத்தைத் தருவார். இது நிச்சயம் என்றார் மனைவியான கமலம் அம்மை.

துணைவியார் சொல்லிய வார்த்தையைச் சிவபெருமான் திருவருள் என்றேயேற்றுத், தானும் துணைவியாரும் பற்பல விரதங்களை அனுஷ்டித்தும், அன்னதானமாகிய மகேஸ்வர பூசை செய்தும் குறையாய் இருக்கும் ஆலயங்களைக் கட்டிமுடித்தும் மற்றும் இப்படியான தான தருமங்களை வரைவில்லாமல் செய்து வந்தார்கள்.

இப்படியே பலகாலம் தருமதானங்கள் செய்து வர இறைவன் திருவருளினாலும், இன்னும் காலை, உச்சி, மாலை ஆகிய முக்காலங்களிலும் செய்கின்றதான தருமங்களாலும், பூரண கலசத்தையொத்த தனங்களையுடைய கமலம் அம்மையாரினது திடமான கற்பு நெறியாலும், தவறில்லாமல் கற்பம் தரித்தாள். சுற்றத்தார்கள் வாழ்த்தும் படியாக அனுஷ்டித்த விரத பலன் எமக்கிங்கே கைமேல் கிடைத்தது என்று கர்ப்பகாலத்திலே செய்வதாகிய சீமந்தம், வளைகாப்பு முதலிய கருமங்களைச் செய்து இன்பமுற்றிருக்க மயில் போன்ற சாயலையுடைய பெண்ணும் வயிற்றிலே உண்டாகிய கற்பம் முதிர்ந்து பத்துமாதம் நிறைவடைந்து ஒரு வித துன்பமும் இல்லாமல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள்.

அந்த வேளையில் தந்தையாரான நீதிநாயக முதலியார் மனம் மகிழ்ந்து தன் புதல்வன் பிறந்த லக்கினம், கிரகநிலை முதலியவற்றை விரைவாகப் பார்த்து, அவை நல்ல பலனளிப்பதால், பிள்ளை இல்லையென்ற துன்பமும் கெட்டகிரகவலு இல்லையென்ற

துன்பமுமாகிய இரு வகைத் துன்பங்களும் நீங்கிப் பேர் உவகை யடைந்து நாள்தோறும் தவறாது செய்து வருகின்ற சிவபூசை மற்றும் சிவதொண்டுகள் என்பவற்றை சுற்றத்தவர்களும் சந்தோசப்படும்படி மேலும் அதிகமாகச் செய்து, வறுமையினால் மனங்கலங்கி வருகின்ற வறியவர்கட்கு நல்ல பொருட்களும் ஆடை ஆபரணங்களும் தானமாகக் கொடுத்தார்.

சொல்லப்படுகின்ற தங்கள் குலப்பெருமை விளங்கும்படியாக விருப்பத்தோடு, மாப்பாண முதலியார் என்ற பெயரை புதல்வனுக்குச் சூட்டி நல்ல அன்போடு வளர்த்து வந்தார். புத்திரன் பிறந்தமையாலே பிள்ளை இல்லையென்ற பெரும் துயர்மனதில் நீங்கி இன்பமெய்தி, நிலைபெற்ற புதல்வனோடும் வாழ்கின்ற நாட்களில் சொல்லப்பட்ட அருந்தவம் மேலோங்கி கமல அம்மையார் மீண்டும் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்து, ஊரில் உள்ள இனசனங்ள் எல்லோரும் மெச்சும்படி வவுனிய முதலியார் என்ற சந்ததிப் பெயரினைச் சூட்டி மகிழ்ந்து தங்கள் இரு கண்களைப் போல, இரு புதல்வரையும் காத்து சிவபெருமான் திருவருளைப் பெற்று வளர்த்தார்கள்.

இளம் பராயத்தோடு வளர்கின்ற இரண்டு பிள்ளைகளினதும் மழலை மொழிகளைக்கேட்டு மனமகிழ்ச்சியடைந்து அளவிலடங்காத இன்பம் அடைந்தனர். வளங்கள் சிறந்து விளங்கும் அன்னை கமலம் அம்மையாரும், பிதா நீதிநாயக முதலியாரும் இளம்பருவத்தோடு வளர்கின்ற பிள்ளைகளுக்கு தேடுதற்கரிய பொன்னாபரணங்கள் ஆடைகள் அணிவித்து அழகைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து உரிய காலத்திலே அவர்களுக்குரிய கல்வியையும் ஓதுவித்தார்கள்.

இரண்டு பிள்ளைகளும் அந்த ஊரில் வசிக்கின்றவர்கள் அனைவரும் மிகுந்த விருப்பத்தோடு மகிழும்படி உத்தமமான குணத்தோடு தாய், தந்தை, சுற்றத்தார்கள் எல்லோருக்கும் ஒப்பற்ற செல்வமாக வளர்ந்து சகல கலைகளையும் கற்றுணர்ந்தார்கள். கண்ணின் மணிபோல அருமையாக இரண்டு ஆண்பிள்ளைகயையும் பெற்றும், பெண்பிள்ளை இல்லையே என்ற பெரிய துன்பம் நீங்கும் பொருட்டு குளிர்ந்த சந்திரனையணிந்த சடாமுடியினையுடைய சிவபெருமான் திருவருள் பெற்று கமலம் அம்மையார் மீண்டும் கர்ப்பமுற்றிருந்தார். மிகுந்த சந்தோசத்தோடு நிலைபெற்ற உலகமெல்லாவற்றையும

முதன்மையோடு ஆண்டு காக்கின்ற வேதநாயகராகிய சிவபெருமான் திருவருளினாலே கமலம் அம்மையாரும் கர்ப்ப முதிர்ச்சி பெற்று பங்குனி மாதத்தில் வருகின்ற உத்தர நட்சத்திரமும், பூரணையும் கூடிய நல்ல சுப தினத்தில் பிரசவ வேதனையுற்று, ஒரு பாம்பையும் ஒரு பெண் குழந்தையையும் இரணைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தார்.

பெற்ற பாம்புக்குட்டியைப் பார்த்து, பிரிவில்லாத சுற்றத்திலுள்ள பெண்களும் ஊரில் உள்ள மற்றப்பெண்களும் பயம் கொண்டு மனதிலே துயரமுற்று ஒரு தடியால் அந்தப் பாம்புக்குட்டியைத் தூக்கி வெளியே எறிந்தனர். அபப்பாம்பானது உடனே சுற்றி, ஊர்ந்து வந்து தாயின் படுக்கையில் ஏறி மடியில் சேர்ந்தது.

இந்த அதி அற்புதமான தன்மையைத் தாயானவர் கண்டு, இது சிவன் செயலே என்று எண்ணி அன்போடு எடுத்து அணைத்து அதனையும் தனது பிள்ளைபோல இரண்டுபேர்க்கும் பாலூட்டி வளர்த்தார். இந்தச் செயலை பிதாவாகிய நீதிநாயக முதலியாரும் கண்டு மனதில் அடங்காத சந்தோசம் கொண்டார். தேவர்களும் வியந்து வாழ்த்துவதாகிய பாம்புக் குழந்தை வந்து பிறந்ததன் பின்னர் பிதா, மாதாவிற்கு முன்பிருந்த செல்வத்திலும் பத்து மடங்காக செல்வம் அதிகரித்துப் பெருகியது. கிடைத்த பெருஞ் செல்வத்தினாலே குபேரனைப் போல பூமியில் எவர்களும் மதிக்கும் படியான ஒப்பற்ற கொடை வள்ளலுமாகினார்.

மனவிருப்பத்தோடு வளர்ந்து வருகின்ற பாம்புருவான குழந்தைக்கு சற்றேனும் மனத்தளர்ச்சி இல்லாமல் தம்பிரான் எனப் பெயர் சூட்டினார். அதனுடன் கூடப்பிறந்த சகோதரியான அழகு மிகுந்த பெண் குழந்தைக்கு நல்ல அறிவாளர்களும் மகிழும்படியாக வள்ளி நாச்சன் என்று பெயரும் சூட்டினர். எட்டுத்திசையிலும் உள்ளவர் களும் புகழ்ந்துரைக்கும் படி அந்த ஊரிலே சிறந்த அழகுபொருந்திய புதிய வீடு ஒன்றுகட்டி குடியிருந்து மனதில் எந்தவித கவலையுமின்றி மக்கள் நால்வரையும் அதிக அன்போடு வளர்த்தார்கள். அந்தக்காலத்தில் பாம்புக்குழந்தை செய்கின்ற அதிசயத் தன்மையைப் பார்ப்போம்.

# திருவிளையாடல்

தம்பிரான் என்று பெயர் சூட்டப்பட்ட பாம்பானது தன்னுடன் கூடப்பிறந்த தமக்கையாம் வள்ளிநாச்சனை முத்தமிடும். தனக்கு மூத்த தமயன்மாரோடும் விளையாடும் மற்றும் அயலிலுள்ள பிள்ளைகளுடனும் ஒருவித தீமையையும் செய்யாது விளையாடும் தானுயர்ச்சி பெறுவதற்காக தாய்க்கும் சில பணிவிடைகளைச் செய்யும் எல்லா இடங்களிலும் கூச்சமின்றித் திரிந்து இரவினில் வந்து வீட்டில் படுக்கும். தனது தாயிடத்தில் பாலைக்குடிக்கும் படுக்கின்ற பாய்தனில் உளக்கி விளையாடும். தந்தையின் தேகமெல்லாம் ஏறிச்சுற்றிக்கொள்ளும், விரும்பும்படி கால்வழியாக ஏறி இறங்கி ஊர்ந்து திரியும் தனக்கு மாறான சூது, வஞ்சகம் செய்கின்ற பேர்களைக் கண்டால் தனது வாலினாற் சுழற்றி அடிக்கும். சுற்றத்தார்கள் வந்தால் அவர்கள் மடிமீது ஏறி இருக்கும். படம் விரித்து ஆடும் பின்னர் படத்தை சுருக்கிக் கொண்டு பதுங்கிக் கிடக்கும். தகுதியான இடத்தில் சென்று சுருணையாடிக் கிடக்கும்.

பின் திரும்பிவரும், எழுந்துநிற்கும், விழுந்து புரளும், ஓடும் நீர் நிலையிற் சென்று குளிக்கும். இப்படியாகப் பலரும் கண்டு வியக்கும்படி உறுதியோடு செய்கின்ற திருவிளையாடல்களை எம்மால் சொல்லவும் இயலுமோ? இயலாதே!

எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி தம்பிரான் என்ற பாம்பானது செய்கின்ற விளையாட்டை ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் கேள்வியுற்று பகலிலும், இரவிலும், இடையிலும் வந்து பார்த்து தங்கள் மனதிற்கு பட்டவாறு சொல்கின்றார்கள். இது பாம்பு அல்ல பூமியிலுள்ள எல்லோரையும் எந்நாளும் பாதுகாத்து உறுதியாகிய அவரவர் கன்ம வினைகளை நீக்கும் பொருட்டு விபூதியை உத்தூடணமாக அணிந்திருக்கின்ற சிவபெருமானே இப்படியான உருவத்தோடு வந்திருக்கிறார் என்று அங்கலாய்ப்போடு கூறுவர். வேறு சிலர் இப்பாம்புக் குழந்தையை பெற்றபின் முன்பை விட பொருட் செல்வம் கூடியுள்ளது. காணிகள், வயல் நிலங்கள், வீடு வாசல்கள் ஏராளமாக வந்து சேர்ந்தது மட்டுமல்ல இன்னும் பல வந்து சேருமென்பர். நீதிநாயக முதலியாருக்கு இந்தப் பாம்பு பிறந்த நாள்

முதல் அளவிடமுடியாத செல்வம் வந்துசேர்ந்தமையால் அதற்குக் காரணமாக இருந்த இந்தப் பாம்பினால் ஒரு காலம் தீமை வந்து அழிந்துபோகும் இது நிச்சயம் என்பார்.

இன்னும் யாரோ ஒரு முனிவரோடு பகைத்துக்கொண்ட எவரையோ பாம்பாகப் பிறந்திட சாபமிட்டதால் குலதெய்வத்தில் சிறந்த கமலம் அம்மையார் வயிற்றில் வந்து இப்பாம்பு பிறந்தது என்றனர். சிலர்

இப்படியே வந்து பார்ப்பவர்கள் எல்லோரும் தங்கள் அறிவுக்கு ஏற்றவாறு மனதில் தோன்றுவதையும் சொல்லி செல்கையில் மூத்தவர்களான மாப்பாண முதலியாரும் வவுனிய முதலியாரும் வளர்ந்து வாலிபர்களானார்கள். தம்பிரான் என்ற பாம்புடன் கூடிப்பிறந்த வள்ளிநாச்சன் மகளும் மங்கைப் பருவத்தையடைந்தாள்.

இப்படியே சில ஆண்டுகள் கழிய இடைவிடாது பாம்பு செய்கின்ற கண்கட்டி வித்தைப் போன்று எந்நாளும் செய்கின்ற திருவிளையாடல்களைப் பார்த்து மகிழ்ந்தும், தங்கள் நிலைமைக்குத் தகுந்தபடி பிள்ளைகளை திருமணம் செய்து வைத்து, எவராலும் தப்பமுடியாத வயதில் மூப்படைந்து உடலும் மெலிந்திருந்தார் தந்தையாரான நீதிநாயக முதலியார். இன்னும் சில ஆண்டுகள் சென்றால் வயது முதிர்ச்சியினாலே பற்கள் விழுந்து, உரோமமும் நரைத்து அழகும் கெட்டு உடலும் கூனிவிடுமென்று நினைத்து இப்பொழுதே தனது கடமையைச் செய்ய எண்ணி தனக்குரிய காணி பூமிகள், நெல்வயல்கள் மற்றும் செம்பு, பொன், வெள்ளி ஆகிய இலட்சுமி வாசம் செய்கின்ற செல்வ வளங்களையெல்லாம் மக்களுக்குப் பிரித்துக்கொடுப்பேன்னென்று மக்களை அழைத்துத் தான் தேடிய பெரும் செல்வம் அனைத்தையும் பிணக்கு ஏதுமில்லாமல் சமபங்காகப் பகிர்ந்து மூன்று பிள்ளைகட்கும் பிரித்து வைத்துச் சொந்தமான நிலபுலங்களையும் பகிர்ந்து சாதனம் எழுதுகின்றபோது,

அந்த சமயத்தில் அங்கு வந்த பாம்பானது அங்கிருந்த பொருட்களையெல்லாம் உளக்கி படத்தினை விரித்துச் சீறிக்கோபித்து சாதனம் எழுதிய ஓலை எழுத்தாணி என்பவற்றை மிகுந்த வலிமையுடன் வாயினாற் பற்றித் துண்டாக வெட்டியெறிந்து

பொருட்களை உளக்கி அப்பொருட்களின் மீது நின்றாடியபோது தாய் தந்தையர் இதனைப் பார்த்து என்ன காரணமோ என்று யோசிச்கலாயினர். தனக்குரிய பங்கு தரவில்லை என்ற கோபந்தானென்று குறிப்பாலுணர்ந்து உள்ள பொருள்களில் உனக்குரிய பங்கைத் தருவோமென்று சொன்னவுடன் கோபந்தணிந்து மனம் சந்தோசங்கொண்டு எனக்கும் பங்கு வந்ததென்று எண்ணி அங்கு அமைதியாய் இருந்தது. அப்பொழுது அரிய பொருட்களையும் நிலபுலன்களையும் தந்தையார் நான்காகப் பகிர்ந்து சாதனங்கள் எழுதிப் பிள்ளைகளே இப்பொருட்களில் ஒவ்வொரு பங்கை எடுங்கள் என்று கூற பாம்பானது விரைந்து வந்து ஓர் பங்கைத் தள்ளிக்கொண்டு போய் கூடிப் பிறந்த தங்கை வள்ளிநாச்சனின் பங்குடன் சேர்த்து எனது பங்கும் உனக்கே இதனையும் நீயே எடுத்துக்கொள் என்று சைகையால் உணர்த்த தங்கை வள்ளிநாச்சனும் பாம்பின் பங்கையும் எடுத்தாள். பின்பு மக்கள் மூவரும் தனித்தனியா இல்லங்களில் இருந்து இல்லறம் நடத்திப் பிள்ளைகளும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். பாம்பு தாய் தந்தையருடன் இருந்தது.

முப்புரங்களையும் சிரிப்பக்கினியாலே எரித்தருளிய முக்கண்ணரும் தேவநாயகருமாகிய சிவபெருமானின் கிருபையினாலே பாம்பு மணஞ்செய்து அரியபிள்ளைகளைப் பெற்றதென்று சொல்லும்படி மரம் நிறைந்திருந்த காடுகளிருந்த மண்ணுணி வழலை, சாரை வலியபிடையன், நாகம், பெருவிரியன், செட்டிநாகம், செம்பாம்பு, வயல்பாம்பு, வட்டுச்சுற்றி, வல்வாசரணம், மணற்சுருட்டை, அளவில்லாத வெண்கிடாந்தி, மலைப்பாம்பு, இவைகளின் குட்டிகள் நீண்டபாம்பு, கரும்பாம்பு, கட்டைப்பாம்பு, கூளைப்பாம்பு, குறட்டைப்பாம்பு, இவைகளெல்லாம் இந்த நல்ல பாம்போடு சேர்ந்து வீட்டிலே வசதியான இடமெங்கும் நெருக்கமாக இருந்தும், மிகுதி புற்றிலும், மனையின் வெளிப்புறங்களிலும், பெட்டி, சட்டிகளிலும் நிறைந்துசொந்த வீடுபோல இருந்தன.

அங்கு வருகின்ற எவர்களுக்கும் ஒரு கெடுதியும் செய்யாமல் முன்பே அவ்வீட்டில் பிறந்து வளர்ந்து வருகின்ற பாம்பைப்போல இவைளும் சாந்தமான குணமுடையவனாகிப் பழவகைகளும், பசும்பாலும்,

இவைகளையே உண்டு இருக்கின்ற நாளில், ஒரு நாள் உதயகாலத்தில் தாயார் கமலம் அம்மையார் குறைவில்லாத முற்றத்தைக்கூட்டிக்கொண்டிருந்த போது, பாம்பானது வந்து மற்றப்பாம்புகளுடன் கூடித் தாயார் கூட்டிக் குவிக்கின்ற குப்பைகளைப் பெலத்துடன் புரண்டு உருண்டு உளக்கிச் சிதறி, தாயினுடைய தலையிலேறிச் சுற்றிக் கால்வழியாக இறங்கி காலை எடுத்து வைக்க முடியாமல் இரண்டு பாதங்களையும் சுற்றி வளையமாடி, வாலினால் மடித்து கூட்டுமாறினைச் சுற்றுகின்ற போது, தாய் அடக்க முடியாத கோபமுற்று தொலைந்துபோ என்று பேசி கையிலுள்ள விளக்குமாற்றினால் அடித்தாள் அந்தப் பாம்பின் வினையும் அன்றே தொலைந்தது.

தாயானவள் தொலைந்து போவென்று சொல்லி அடித்தவுடனே, அப்பாம்பானது அக்கினியைப் போன்று கோபித்தும் மனித வயிற்றில் கற்பம் தங்கிப் பிறந்த தெய்வீகக் குழந்தை என்பதால் என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்று மிகுந்த அன்போடு பாலூட்டி வளர்த்தார் என்று தன்னுள் நினைத்து சற்றே கோபத்தையடக்கி மாயமாக அந்த வீட்டை விட்டு நீங்கியது.

நெருங்கிய தேவர் மனித விலங்குகள், பட்சிகள் மற்றைய சொத்துக்கள் எவையும் நல்வினை தீவினைக்கீடாக இப்பூமியிற் பிறந்து சில நாட்கள் இருந்தாலும், அவர்களைப் பற்றிய மும்மல பந்தத்தினால் வருந்தி உழல்வார்கள். ஆகையால் இப்பாம்பின் கன்மவினை தீர்ந்ததும் ஆணவமல மற்றும் போகாமையால் மனதிற் பொருந்திய கோபத்தோடு வீட்டை வெறுத்து மறைந்து போக, அதனையறிந்த மற்றையபாம்புகளும் ஒற்றுமைப்பட்டு எழுந்து புறத்தே சென்று முன்பே தனித்துச் சென்ற தம்பிரான் என்ற பாம்புடன் கூடிப்போயின விதியின் வலிமையை விதித்த பிரமாவென்றாலும் விலக்க முடியுமோ? முடியாதே!

இவ்வாறு பாம்புகளனைத்தும் புறத்தே போக, நல்ல இயல்புடைய வீட்டினுள்ளே உறங்கிய பிதாவாகிய நீதிநாயக முதலியாரும் கண்விழித்து தங்கள் சர்ப்பக் குழந்தைகளைக் காணாமையால் மனைவியான கமலம் அம்மையாரைப் பார்த்து எங்கே என்று வினவ ஆறாத துயருடன் அவர் கூறுகின்றார். நான் கூட்டிக் குவித்த இந்தக்

குப்பைகளை கிண்டிக்குழப்பி என்மீதும் தாறுமாறாக உளக்கி தலைமுதல் கைகாலெங்கும் ஏறிச்சுற்றிச் செய்யுமிடர் பொறுக்காமல் பேசி மாறினால் தட்ட, வீட்டு வாசலுக்கு அப்பாற் போயின. மற்ற வீட்டினுள் பாரும் என்று கூறிப்பார்த்ததும் இல்லாமையினால் பக்கத்திலேயுள்ள புலங்கள், புற்றுகளிலும், வயல்வெளிகளிலும், வளவு வாய்க்கால்களிலும், காட்டிலும் விரைந்து தேடித் தேடிக் காணாமையால் கரைச்சிப் பதி என்ற நாடு முழுவதும் தேடிப்பார்த்து அலுத்து சொல்ல முடியாத துன்பத்தில் ஆழ்ந்தார்கள்.

இந்தச் சமயத்தில் சர்ப்பக்க குழந்தை பிரிந்துபோய் விட்டதென்றதைக் கேள்வியுற்ற தங்கையான வள்ளிநாச்சனும், தமையன்மாரான மாப்பாணர், வவுனியர் ஆகியோரும் தாய் மனைக்கு வந்து தாயாருடன் துயர் கொண்டிருக்க அண்மையிலிருந்த சுற்றத்தவர்களும் அவ்வூர் மக்களும் அறிந்து வந்து திரும்பவும் எல்லா இடமும் தேடிக் காணாமையால் இங்ஙனம் நிகழ்ந்த சம்பவத்தை யோசித்து ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இப் பாம்புகள் சென்ற காட்டிலேயேனும் ஊர்புறத்திலேனும் ஊர்ந்து போன அடிச்சுவடு ஒன்றையும் காணோம். ஆகவே உள் நின்று நடத்துகின்ற தேவவுருவங் கொண்டு மாயமாக மறைந்துவிட்டன எல்லோரும் அதிசயிக்கும் படி என்றார்கள்.

சுற்றத்தவரும் ஊர் மக்களும் இவ்வாறு கூறி நிற்கின்ற சமயத்தில் தந்தையான நீதிநாயக முதலியார் மிகவும் ஏக்கமுற்று மேனி எவ்விடங்களிலும் கண்ணீர் சொரிய நடுக்கம் கொண்டு விறைத்துச் சோர்ந்து ஒரு சேர உடம்பு முழுவதும் வாடி ஐயகோ! என்று வாய்விட்டுப் புலம்பலுற்றார். அன்றைய தினம் அங்ஙனம் நிகழ்ந்த துயரத்தை யாராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது. துன்பம் நிகழப் பெற்றவர்களாகிய நீதிநாயக முதலியாரும் கமலம் அம்மையாரும் அன்று உணவும் அருந்தாது சிலைபோலாகி ஒரு செயலுமற்று மிகுந்த பக்தியோடு சிவபெருமானையும் உலக மாதாவாகிய உமாதேவியாரையும் பேரன்புடனே போற்றித்துதித்து உறக்கத்தில் இருப்பவர்களைப் போல மயங்கி நிலத்தில் கிடந்தார்கள். முன்பு தாம் நித்திரைக்குப் போகும் சமயத்தில் பாம்புகள் தலைப்பக்கமும் கால்பக்கமும் எவ்விடமும் அணைந்துகிடந்ததும் தாங்கள் பெற்ற சிறு குழந்தைகளைப்போல பால், பழம் ஆகியவற்றைக் கொடுத்து அன்போடு வளர்த்து வந்ததும் நினைவினில் வரவர எண்ணி யெண்ணி அடுத்து வருகின்ற துன்பத்தோடு சற்று அயர்ந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் கண்ணயர்ந்த சமயத்திலே அடியார்க் கெளியவராயும், பரஞ்சோதியாயும், மலரகிதராயும் விளங்கு கின்றவராகிய சிவபெருமான், இன்றிரவே இவ்வன்பர்கட்டு நடந்த சம்பவத்தை உணர்த்த வேண்டும் என்று எண்ணி, ஒரு அந்தணரைப் போல மார்பில் விளக்கா நின்ற உபவீதம் என்ற பூணூலும், கையிற் பிரம்பும் முகமாகிய தாமரை மலர்ந்தால் போன்ற உருவத்தோடு முன்னமே அறிவொடுங்கித், தரையிற் துயில் கொள்ளும் நீதிநாயக முதலியாரின் கனவில் தோற்றமாகி நல்ல தவத்தையுடைய அன்பனே! நீவிர் பெற்று வளர்த்த பாம்பு நமது சரீரத்தையு டையதாகும். நாம் வரையறுத்துக்கூறி விடுத்த கால வெல்லையொழிந்தமையால் ஒருவரும் காணா வண்ணம் மறைந் துள்ளது.

சுற்றமாயிருந்த மற்றப்பாம்புகள் ஊர்ந்து சென்று கொக்காவில் என்ற வனத்தினூடாகப் போனவழி ஒன்று உண்டு அந்தத் தடத்தை பின்னரே காணுவீர்கள் அதிலிருந்து மறை வில்லாது அவை சென்று வன்னிநாட்டில் பல வளமும் சிறந்து விளங்கும் புதூர் என்ற வனத்தில் கூட்டத்தோடு தங்கியிருக்கின்றன. நீங்கள் அந்த இடத்திற்கு தகுந்த வரிசை வாத்தியங்களுடன் மனம் மகிழும்படி சென்று அழைத்து வந்து இங்கே உயர்ந்த பெருமைமிக்க ஒரு கோயில் கட்டி, அங்கே முறையாக வைத்து பூசை செய்து, அந்தப்பாம்பு பிறந்த தினமாகிய பங்குனி மாதம் வருகின்ற பௌர்ணமியும், உத்தர நட்சத்திரமும் சேர்ந்த நன்நாளில் சிறப்பாகப் பொங்கிப், பெருவேள்வி செய்யுங்கள் என்றவாறு கூறிப் பிராமணராக வந்த சிவபெருமான் சென்றது போல நீதிநாயக முதலியார் கனவு கண்டவுடன் எழுந்து துணைவியாராகிய கமலமும் அறியும் படிகூறி மனதிலே பற்பல சிந்தனை செய்து கொண்டு எதற்கும் கனவிலே கண்டபடி செய்வோமென்று துணிந்து சிவபெருமானின் இருபாதார விந்தங்களையும் வணங்கிக் கொண்டு புதூர் என்ற இடத்திற்குச் செல்வதற்குரிய கரும காரியங்களைப் பிழையில்லாமல் ஆயத்தம் செய்து துயரங்களை மறந்து கனவிற் காட்டியபடி பாம்புத் தெய்வமாகிய தம்பிரான் இருக்கின்ற இடத்துக்கு குறிப்பிட்ட வரிசை வாத்தியங்களோடு சென்று அழைத்துவருவதற்காக நீதிநாயக

முதலியாரின் துணையோடு வாழ்கின்ற அடிமை மக்கள், குடிமை மக்கள், பணிந்து வாழ்கின்ற மற்றைய சாதி மக்கள், மற்றும் தோளோடு தோள்கொடுத்து வாழ்கின்ற நண்பர்கள் அனைவரும் அங்கே வந்து ஒன்றுபட்டுக்கூடி வன்னியர் குலத் தலைவராகிய நீதிநாயக முதலியாருக்கு வரப்பெற்றதாகிய வரிசைகளோடு சொல்லப்பெற்ற தவில், பேரிகைப்பறை, பணைப் பறை, உடுக்கு, படாகப்பறை, நாதஸ்வரத்தோடு வாசிக்கப்படுகின்ற வீணை, சங்கு, சல்லாரி, நிலையான சேமக்கலம், கைத்தாளம் முதலிய வாத்தியங்கள் முழங்கவும் கொடி, குடை ஆலவட்டம், சாமரை, வெள்ளிகட்டிய பிரம்பு, பாக்குப்பை, காளாஞ்சிய, வாசனை பொருந்திய மலர்த்தட்டு போன்ற உபசாரப் பொருட்களும் எடுத்துக் கொண்டு தொண்டர்கள் குழுமிவர நச்சுண்டிருந்த கண்டத்தினை யுடைய சிவபிரானை வியந்து பாவாணர்கள் துதிபாடவும், இடிமுழக்கம் போல வெடிகளும் மின்னலைப்போல வாணங்களும் அதிர்ந்து பொழிய நல்ல சுபநாளிலே புறப்பட்டனர். கனவிலே கண்ட பாதையிலே சிலகாத தூரம் கடந்த போது கொக்காவில் என்ற காட்டுப் பகுதியில் பாம்புகள் அரைந்து போன அதிசயமான அடிச் சுவட்டைக் கண்டு ஞான முதல்வராகிய சிவபிரானை மனதார வணங்கிக் கொண்டு அந்த வழியோடு சென்றனர்.

இவ்வாறு செல்கின்ற போது அந்தக் காட்டினிலே மதம் பொருந்திய யானைகள், கொழுத்த புலிகள், வலிய கரடிகள், பன்றிகள், மரைகள், மான்கள், முயலினங்கள் போன்ற விலங்கினங்கள் இவர்களை கண்டவுடன் முன்னோக்கி ஓடிப்போகின்றனவாம். அந்தப் பாம்புகள் சென்றவழியை நாங்கள் மனவிருப்பத்தோடு கூட்டமாகச் சென்று காட்டுவோம் எங்கள் பின்னே வாருங்கள் என்பது போலாகுமாம். இன்னும் இந்தக் காட்டிலே வசிக்கின்ற குரங்குகள் முன்பாக நிற்கின்ற மரங்களில் பாய்ந்து இவர்கள் வரவைக் காத்திருந்து இவர்கள் நெருக்கமாக வந்த பின்பு மீண்டும் பாய்ந்து குதித்தோடி உறுமிக் கத்துவதை யோசிக்கையில் இந்த வழியாலேதான் பாம்புகள் போயின இந்த வழியேதான் வாருங்கள் என்று சொல்வதை போல் விளங்குமாம்.

செல்லுகின்ற காட்டுவழியே இடையிடையில் வருகின்ற கற்பாறைகள், பெருமுட்களையுடைய பற்றைகள் ஊடாகவுள்ள ஆறுகளும், சேறு நிரம்பிய வழிகளிலும், நடந்து சென்று கூடி வருகின்றவர்களோடு சொல்லப் பெறுகின்ற புகழினையுடைய வன்னி நன்நாட்டிலே சென்று முன்னமே கனவில் சொல்லிய சோலையைக்கிட்டினர் பக்கமாகக் குளமும், மேற்பக்கமாக சோலையும், சோலையிலே பாதி, பலாசு, கொம்புகள் நிறைந்த சிறுகுருந்து, வாடாதகுறிஞ்சி, திருவாத்தி இதழ் மலர்ந்த செருந்தி வளர்ந்த சண்பகம், நெடுத்துப் பருத்துள்ள வன்னிமரம் ஆகிய மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. இன்னும் வாசமுள்ள கொன்றை, மகிழ், காட்டு மா, விளாத்தி வில்வம், உயர்ந்த கோங்கு மிருதியாகிய புன்னை, கடம்பு, குற்றமில்லாத நொச்சி, முதிரைமரங்கள், நெருங்கி வளர்ந்து ஆன்ம நாயகராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஓர் ஆலயத்தின் சூழல் போல் விளங்கியது.

சொல்லப்பட்ட வளங்கள் சிறந்து விளங்குகின்ற அமைப்பைப் பார்த்து கனவிலே கண்ட சிறந்த தலம் இதுவேயாகும். என மனதில் நினைந்து அங்கே சுற்றிப் பார்க்க அழகான கோயிலைப் போலக் குளிர்ந்த நிழலைப் பரப்பி நிற்கின்ற ஒரு பாலை மரத்தின் அடிப் பொந்தின் உள்ளே பாம்புகள் கிடப்பதை நீதிநாயக முதலியார் கண்டார். கண்டதும் மிகுந்த ஆச்சரியத்தோடு கன்றைப் பிரிந்த கன்னிப் பசுவைப்போல மனமுருகிப் பெருகி வருகின்ற அன்பினாலே உள்ளம் களிப்படைந்து, வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று கண்ணீர் சொரிய வெம்பிப் புலம்பி ஒருவாறு தெளிந்துமுன்புதான் கண்ட கனவினுடைய திறனை நினைந்து இறையன்போடு பின்வருமாறு செய்கின்றார்.

பக்கத்திலேயுள்ள நீர் நிறைந்த பொய்கையிலே சென்று தோய்ந்து சிவபக்தியோடு விபூதியணிந்து. நல்ல மனத்துடனே சிவாயநம என்று பஞ்சாட்சரத்தை உச்சரித்து, மனச்சுத்தமுடையவராய் பாம்புகள் கிடக்கின்ற பெருமைமிக்க பாலை மரத்தின் அடியிலே வந்து வெள்ளையான பட்டாடையை விரித்து ஊரில் இருந்தே எடுத்து வந்த தூப, தீபம் இவைகளை வைத்து அன்றலரந்த நல்ல மலர்களை அதன் மேலே பரப்பினார்.

வேறொரு பட்டாடையை எடுத்து, விரித்து அதன்மேல் பசிய மென்மையான தட்டினை வைத்து அந்தத்தட்டின்மேல் வாசனை பொருந்திய பூக்களைச் சொரிந்து பூசைப் பொருட்களையெல்லாம் வரிசை தவறாமல் பாம்புகள் இருக்கின்ற பாலைமரத்தின் முன்னிலையில் வைத்து மேள தாள வாத்தியங்களும் முழங்க வெடியும் சப்திக்க மன உறுதியோடு முன்னின்று தோத்திரங்கள் பல பாடி வணக்கம் செலுத்தி ஆதியந்தமில்லாத முழுமுதற்பெருமானே! அடியவர்களாகிய நாங்கள் செய்த அரிய பெரிய பிழைகளை யெல்லாம் மன்னித்து எம்மைச் சோதிக்காது திருவுளத்தில் இரக்கம் கொண்டு நீதியோடு எமது வேண்டுதலை ஏற்று தேவரீர் எம்முடனே வந்தருள வேண்டும் என்று நினைத்தவாறு எழுந்து நின்று கும்பிட்டு பொங்கிய அன்போடு சிரசின் மீது கைகளை வைத்து வணங்கி நின்றார்.

அந்தச் சமயத்திலே கருமையாகி உதயகிரியிலே சூரியன் உதித்து வந்தது போல், சிவந்த ஒளியுடைய கானல் நேரத்தில் அந்தத்தட்டின் மேற்பரவப்பட்ட மலரணைமீது வந்து தோன்றி தஞ்சமென்று போற்றுகின்ற அடியவர்கள் முன்னிலையில் தன்னுடைய திருவுருவத்தைச் சுருக்கி தம்மைப் பாம்பென்று பயமுறாது எடுத்துச் செல்லுங்கள் என்று குறிப்பாலுணர்த்தி சுருணையாடிக் கிடந்தது.

காட்சியாக அந்த அற்புதத்தைக் கண்ட மாத்திரத்திலே மனதிலடங்காத ஆவலோடு ஏற்றதாகிய கிரியைகளையெல்லாம் முறையாகவே செய்து வணங்கினார். வணங்கி மென்மையாகிய பட்டினாலே அந்தப் பூந்தட்டை மூடிமற்றயை காரியங்களையும் முடித்துக்கொண்டு, அங்கு நின்ற அடியார்களிற் சிலர் தேவமங்கலப் பொருளைத்தாங்கவும் செப்பமாகிய குடை, கொடியுடன் சாமரைகள் வீசவும் பலவாத்தியங்கள் ஒலிக்கவும் அங்கு வந்த எல்லோரும் பாடிப்பணிந்து நிற்க நீதிநாயக முதலியார் விரைவாக அந்தப் பூந்தட்டோடு எடுத்து சிரசிலே வைத்துக்கொண்டு சொல்லரிய வரிசை

வாத்தியங்களோடும் வாசனை பொருந்திய அந்தப் பூஞ்சோலையை விட்டு நீங்கி வன்னி நாட்டு வழியாக வந்து அதன் எல்லையைக் கடந்து தங்களுடைய கரைச்சி நாட்டிற்கு அண்மையாக வந்தார்கள்.

இவ்வாறு வருகின்ற சமயத்தில் வழியிலே கண்ட மக்கள் எல்லோரும் மனமகிழ்ச்சியுடையவர்களாகி வீட்டினுள்ள சுற்றத்தவர்கட்கும் இந்தத் திருவருட்திறனை கூறிப் பலரும் வந்து சேர்ந்து சொல்ல முடியாதளவுக்கு மிகவும் நெருக்கமாகச் சென்றார்கள். இதை அறிந்தவர்கள் சந்திகள் எங்கும் சனத்திரளாகி நின்று தங்கள் அறிவுக்கெட்டியவாறு புதிய பட்டுப் புடவைகள் குற்றமகன்றிட நிலவிரிப்பாக நிலத்திலே விரித்தும் வியப்போடு மேலாப்பும் பிடித்தும் வருபவர்களாகின்றனர்.

இப்படியே பாம்புத் தெய்வத்தைத் தாங்கியபடி நீதியாக முதலியாரும் கூட்டமும் வருகின்ற போது கரைச்சிப் பகுதியில் உள்ளவர்கள் தங்கள் வீட்டுவாசல்கள் தோறும் ஒளிபொருந்திய நல்ல விளக்குகள் ஏற்றுவார்கள். நல்ல விருப்பத்தோடு பூரண கும்பங்களையும் வைப்பார்கள். சொல்லப்படுகின்ற சாதி மலர்களை எல்லாம் முன்பாகவும், பின்பாகவும், பக்கமாகவும் சொரிவார்கள். இன்னும் ஆவலோடு பக்தியுடனும் ஆராத்தி எடுப்பார்கள்.

இன்னும் அங்கே வந்தவர்கள் தாங்களும் எம்பிரானின் தொண்டர்கள் போல வணங்கிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவார்கள். வாயில் வந்தபடி பாடல்களையெல்லாம் பாடுவார்கள். பாலும் பழமும் கொண்டு வந்து கூடுவர் பெண்கள். சிறு பிள்ளைகளும் கூட்டத்தோடு கூடி அங்கே நடக்கின்ற சிறப்பைப்பார்ப்பார்கள். இப்படியாக பலபல நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்க, இவர்களோடு வன்னிய வேளாளர் குலத்தலைவியும் நீதிநாயக முதலியாரின் துணைவியாரு மாகிய கமலம் அம்மையாரும் மகளாகிய வள்ளிநாச்சனும் கூடிவரத் தங்கள் பழைய வீட்டுக்கு அப்பால் நிலைபெற்று வளர்ந்திருந்த மரச்சோலை நிறைந்த இடம் கண்டனர். இந்த இடம் முன்பு தம்பிரான் என்ற சர்ப்பக்குழந்தைக்கு சாதனமாக எழுதப்பட்டிருந்தது. அதுவுமட்டுமல்லாமல், தெய்வ விருட்சம் போன்று அரச மரமும் வளர்ந்து வருகின்றது.

முன்பே இங்கு ஒரு விநாயகப் பெருமானின் திருக்கோயிலும், திருக்குளம் ஒன்றும் சூழ்ந்திருக்கின்றபடியால் எம்பெருமானை வைத்துப்பூசை செய்து வணங்குவதற்குரிய இடம் இது போல வேறு இல்லை ஆதலினால் இந்த அருமையான சோலைதான் திருக்கோயில் அமைப்பதற்கு தகுந்த இடமாம் என்று நிச்சயித்துக்கொண்டு அந்த இடத்துக்கு சென்று தம்பிரானை தன்னிடத்திலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றது போல பரிசுத்தமாகி வளர்ந்து நின்ற அந்த நல்ல அரச மர நிழலிலே அனைவரும்சென்றமர்ந்தனர்.

அங்கே நின்றிருந்த ஏவலாளர்கள், தொண்டர்களைக் கொண்டு பகுதி பகுதியாகப் பந்தல்கள் போடுவித்து, சமயத்துக்குத் தக்கவாறு அமைக்கப்பெற்ற நல்ல ஆசனத்தின் மீது அங்கு நின்ற மக்கள் அனைவரும் கண்டு வணங்கும்படி பாம்புத் தெய்வத்தை நீதிநாயக முதலியார் மிகுந்த பக்தியுடன் இறக்கிவைத்தார். அந்தப் பந்தலின் உள்ளே அருமையான பட்டுப் புடவைகளை ஒளிவிளங்கும் வண்ணம் மேல் விதமானமாகக் கட்டி தீபங்களையும் ஏற்றி கரும்பு, வாழை, கமுகு என்பவற்றுடன் மாவிலைத் தோரணங்களையும் கட்டினார்.

அங்கே தம்பிரானுடன், உமையம்மையாரோடு சிவபிரானையும் ஸ்தாபித்து நல்ல பூமாலைகளைப் பொலிவாகச் சாத்தி நல்ல மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், தேன், பசுப்பால் ஆகியவற்றுடன் திருவமுது ஆகியவற்றை நிவேதனங்களாக்கி இறைவன் திரு முன்னிலையில் வைத்து பெருகிவருகின்ற அன்போடு எல்லோரும் வணங்க முழுமையாகிய பூசையினை முறை தவறாது செய்தார் நீதிநாயக முதலியார். பெருவிருப்போடு திருவடிகளில் வீழ்ந்துவணங்கி தேவாதிதேவராகிய சிவபெருமான் திருவருள் பெற்றுக்கொண்டு திருத்தொண்டு செய்து நின்றவரும் மற்றைய அன்பர்களும் புதிதாக அமைந்த கோவிலில் இருந்து தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். அதன் பின்னர் எல்லாம் வல்ல சிவபெருமான் இங்கு நாகதம்பிரானாகத் தோன்றித் திருவருள் செய்த அதி அற்புதத்தை கேள்வியுற்றுப் பல ஊரில் உள்ளவர்களும் வந்து எம்பெருமான் திருவருள் பெற்றுக்கொள்ள அவருக்கு விருப்பமான பொங்கலும், பூசையும் செய்து வணங்கி இல்லங்களுக்குச் சென்று இன்பம் பெற்று வாழ்ந்தனர்.

## அதிசயம்

மேன்மையாகிய வன்னி மரபினிலுதித்த நீதிநாயக முதலியாரும் சுற்றத்தவர்களும், நெருங்கிய பலவளமும் பெருக்கிச் சிறந்து விளங்கச் சீர்சிறப்போடு வாழ்ந்தவர்கள். பாம்புத்தெய்வமும் இரவில் தங்குவதற்கு ஏற்ற இடமான அந்த அரசமரப் பொந்தினிலே தங்கியதாம்.

இவ்வூரில் உள்ளவர்கள் அன்போடு எம்பெருமானை நினைந்து காலையிலும், மாலையிலும் திருக்கோயில் வந்து கூட்டுதல், மெழுகுதல் போன்றவற்றைச் செய்து உயர்ந்த அறிவாளர் சொல்லியபடி திருவிளக்கிடுதல், பத்திர புஸ்பமெடுத்தல் போன்ற திருத்தொண்டுகளையும் செய்து எம் பெருமானை வணங்கிக் கொண்டு செல்வார்கள்.

நாகதம்பிரான் திருக்கோயிலை ஸ்தாபிதம் செய்து வணங்கிய அந்த நாள் தொடக்கம் கரைச்சிப் பகுதியில் விசம் பொருந்திய உயிரினங்களாலும் சொல்லப்பெறுகின்ற பெரிய காட்டு மிருகங்களினாலும் உண்டாகும் தீமை, பகைவர்களின் கெடுதல்கள், பில்லி, சூனியம் போன்றவைகளால் வரும் கர்ம நோய்கள் அனைத்தும் பரம்பொருளாகிய சிவபிரான் திருவருளால் தீரப்பெற்று அவரது அடியவர்கள் ஒரு துன்பமுமின்றி இன்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

இந்தக் கரைச்சி என்ற நல்ல நாட்டிலே மாதந்தோறும் மூன்று மழை வரைவின்றிப் பொழிந்து ஆண்டுதோறும் நல்ல நெல் முதலிய தானியங்கள் மலிந்து விளைந்தன. குற்றமில்லாத தருமமும், நீதிநெறியும் மேலோங்கின. பாவச்செயல்கள் ஒழிந்தன. இதழ் விரிந்த கொன்றை மாலையைத் தரித்தவராகிய சிவபெருமானும் உமாதேவியாரும் நாகதம்பிரானும் இந்தப் புளியம்பொக்கணை என்ற புனித ஊரில் எழுந்தருளியிருந்து வணங்கி வழிபடுவோருக்கு நல்லருள் புரிகின்றனர்.

தாயாகிய கமலம் அம்மையாருடன் கோபித்துக்கொண்டு சர்ப்பங்களெல்லாம் ஒன்று கூடி முன்பு சென்றதாகிய பாதையிலே கொக்காவில் என்ற சோலையில் தொடங்கி பாம்புகள் தங்கியிருந்த இடமான புதூர் என்ற இடம் வரை எல்லோரும் காணும்படியாக அரைந்து சென்ற இடம் அந்தக் காட்டுப் பாதையில் இன்று வரையும் புல்பூண்டுகளும் முளையாது இருக்கின்றது. இந்த புதுமையால் இவ்விடம், சிறந்த நாகம் சரிந்த சோலை என்று கூறுவர். சொல்லப்பட்ட பூசை முறைமையில் தவறில்லாமல் முறைப்படி சிலகாலம் பூசை செய்து வந்த பூசகரான நீதிநாயக முதலியார்

சிவபதமடைந்தார். இதன்பின்பு நீதிநாயக முதலியாரின் இரண்டாவதுபுதல்வனாகிய வவுனிய முதலியார் பூசகராகி ஆலயத்தையும் திருத்தி புதிதாகக் கட்டுவித்து எம் பெருமானுக்குரிய பூசை பொங்கல் என்பவற்றை முறைதவறாது சிறந்த முறையில் செய்து வந்தார்.

கோயில் உரிமையாளர்களாகிய வம்சத்தில் உள்ளவர்களும், புளியம்பொக்கணை ஊரில் உள்ள சில பெரியோர்களும், சேர்ந்து தாமாகவே முன்வந்து கோயில் தொண்டுகளையும், மற்றைய கருமங்களையும் மனவிருப்பத்தோடு செய்து வந்தார்கள். பெருங்கருணையோடு வீற்றிருந்து அருளுகின்ற நாகதம்பிரானுடைய திருவருள் பிரபல்யம் பெற்று விளங்கும் பொருட்டு ஆண்டுதோறும் வருகின்ற பங்குனிமாத உத்தர நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமி பெரும் பொங்கல் விழாவை மிகவும் சிறப்புற நடாத்தி வந்தார்கள். விருப்பத்துடன் வேண்டுதல் செய்து வணங்குகின்ற மெய்யடியார்கட்கு கேட்பவற்றையெல்லாம் கொடுத்தருளுகின்ற மலரகிதராகிய நாகதம்பிரானுக்குரிய நித்திய பூசை, மாதாந்த பொங்கல், வருடாந்த பொங்கல் போன்ற சிறப்பு நிகழ்வுகளைக் குறையொன்றுமில்லாமல் செய்து மேலும் மேலும் நாகதம்பிரான் திருவருள் நாடெங்கும் விளங்கச் செய்து வந்தார்கள். இவ்வாறான காலத்தில் வருடாந்த பெரும் பொங்கலான பங்குனி உத்தரப் பொங்கல் விழாவை எதிர்கொண்டனர்.

இதன்படி விதிமுறைக்கேற்ப செய்கின்ற பொங்கல் விழாவுக்கு எட்டு நாட்களுக்கு முன்பு விளக்கு வைப்பு என்ற நிகழ்வுடன் நாகதம்பிரானுக்கு விசேட அபிஷேக பூசை செய்து வழிபடுவர். அதனைத் தொடர்ந்து பிரம்பு கொடுக்கின்ற சிறப்பு நிகழ்வு நடைபெறும். இதிலே இறைவன் திருவுருவை நினைவுபடுத்தும் வகையில் வெள்ளிகட்டிப் புனிதப்படுத்தப்பட்ட பிரம்பு ஒன்றும், நாகபடமும் மற்றும் விபூதி பேழை அடங்கலான பெட்டியும் பிரதம பூசகரிடமிருந்து பெற்றுக்கொண்ட பூசகருடன் கோயிலில் தொண்டு செய்கின்ற அடியவர்களும் பின் தொடர முரசப்பறை போன்ற வாத்தியங்கள் ஒலித்துக்கொண்டு முன்னே செல்வதும், இவ்வாறு சென்று ஊர்கள் தோறும் அடியவர்களின் காணிக்கை பெறுவது வழக்கமாகும்.

இவ்வாறு ஊர்கள் தோறும் செல்கின்ற போது அன்பர்கள் கொடுக்கின்ற காணிக்கைப் பொருட்களை மனச் சந்தோசத்துடன் ஏற்று பெரிய எருமைக் கடாக்களிலும், எருதுகளிலும் பொதியாகக் கட்டி ஏற்றியும் தேர் போன்று அசைந்து உருண்டு வருகின்ற

மாட்டுவண்டிகளிலும் சில பொருட்களை ஏற்றிக்கொண்டு சமுத்திரம் போன்ற பேரொலியுடன் ஒருங்கு சேர்ந்து பொங்கலுக்கு வேண்டிய நல்ல பண்டகச் சாமான்களைச் சேர்த்துக் கொண்டு திரும்பி திருக்கூட்டத்தாரோடும் வந்து, வளம் சிறந்து விளங்கும் மடுக்கரை என்ற ஊரை நெருங்கினர். பண்டம் கொண்டு வருகின்ற பூசகர் மற்றும் மெய்யடியார்கட்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற பெரு விருப்பத்தோடு அவ்விடத்திலுள்ள ஆண்களும், பெண்களும் சேர்ந்து வந்து வணங்கி இவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு போனார்கள்.

ஆண்டுதோறும் வழமையாகவே வந்து தங்கப்பெறுகின்றதாகிய பண்டமரவடிவிலே வந்து சொல்லப்பட்ட பண்டச்சாமான்களை பொதிகளையெல்லாம் இறக்கிவைத்து, முந்திய காலங்களில் வழமைப்போலத் தொண்டுசெய்து பழக்கப்பட்ட அடியார்கள், பல பல விதமான உபசாரங்கள் செய்து வரவேற்றனர். அப்போது முன்னர் தன்னோடு கூடி வந்த திருந்தொண்டர்களோடும் பூசகராகிய வவுனிய முதலியார் அங்கே வீற்றிருந்தார்.

அந்த வேளையில் அங்கு வந்திருந்த ஆண்களும், பெண்களும் சேர்ந்து அன்னதானம் சமைப்பதற்குரிய அரிசியும், காய்கறிவகையும், மற்றும் தேவையான பொருட்களையும் குறைவில்லாமல் கொண்டுவந்து சேர்த்திருந்தனர். முந்திய காலங்களில் தாங்கள் செய்கின்ற வழக்கப்படி முதன்மையாகிய அன்போடும், பக்தியோடும் அங்கே சமையல் தொழிலை தொடங்கினார்கள்.

தகுதியான சோறு, அமுது முதலியவற்றோடு கறிவகைகளை சமைக்கின்றவர்களும் சிறந்த பாக்கு, வெற்றிலை என்பவற்றுடன் பூக்கள் முதலான பூசைப்பொருட்களை சேர்த்துக்கொண்டு வருபவர்களும் விருப்போடு பூசனை செய்வதற்கான கிரியைகளை செய்ய பூசகர்களுடன் நின்று உதவுபர்களும் இன்னும் இது போன்ற திருத்தொண்டுகளைச் செய்கின்றவர்களும் பண்ட மரவடியில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இக்காலம் ஒல்லாந்த நாட்டவர் இலங்கை நாட்டை முழுமையாக அரசாட்சி செய்த காலம். அப்போது அவர்களின் மன எண்ணப்படி நடந்து அவர்களுக்கு கீழ்படிந்து பணிவிடை செய்கின்ற சிலபேருடன் சேர்ந்து, மேலங்கி, தொப்பி என்பவற்றை அணிந்து நல்ல குதிரைகளின் மீது ஏறி நாட்டு வழக்கங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு மடுக்கரைப் பக்கமாக வந்தார்கள்.

அந்த அரச அதிகாரிகள் வந்த சமயத்தில் பண்ட மரவடியில் பூசைக்குரிய சடங்குகளிலும் மற்றும் திருத்தொண்டுகளிலும் ஈடுபட்டிருந்தவர்கள் மிகவும் பயமுற்றனர். பயத்தினால் அங்கும், இங்கும் ஒதுங்கி மறைந்திட முயன்றனர். இந்த அதிசயத்தை வியப்போடு பார்த்த அந்த அதிகாரிகள், கண்டோர் உடல் நடுங்கி வியர்வை சிந்தும்படி அச்சமூட்டுகின்ற வகையில் அங்கே நடப்பதை அறிவதற்காகத் திடீரென அச்சனக்கூட்டத்தின் முன்பாக வந்தார். அருகினில் அவர்கள் வருகின்ற போது மிகவும் அழகான ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற பூசகரைப் பார்த்து வியப்படைந்து, மனதில் அடங்காத கோபமும் கொண்டனர். பல சீர்வரிசையோடு இங்கே நிற்கின்ற கூட்டத்தவர்கட்கு இவர்தான் தலைவரென்று கருதி வேறொன்றையும் சிந்தியாதவர்களாய் அர்ச்சகரான அவரை அழைத்து அவர் முன் சில கேள்விகள் கேட்டுப் பதில் கூறுமாறு கேட்கின்றனர்.

நீங்கள் எந்த ஊரில் உள்ளவர்கள்? இங்கே எதற்காக வந்தீர்கள்? இங்கே கூட்டமாக உள்ளவர்கள் சந்தையில் உள்ளது போல் காய் வர்க்கங்களையும் உணவுப் பொருட்களையும் கொண்டு வந்து சமையல் செய்வது ஏன்? இதற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் எல்லாம் எப்படி வந்தது? முன்பு இந்த நாட்டை ஆட்சி செய்து வந்த புத்தியற்ற தமிழ், சிங்கள மன்னர்களைப் போல எம்மையும் நினையாதீர்கள். நாங்கள் தண்டனை தந்தால் உபாதை தாங்கமாட்டீர்கள். அதற்கு முன்பு உள்ளதைச் சொல்லிவிடுங்கள் நாங்கள் அறிந்து கொள்வதற்கு.

வல்லமை கொண்ட ஒல்லாந்த நாட்டவராகிய நாங்கள் இந்த நாட்டைக் கைப்பற்ற வந்தமையை அறிந்து இலங்கையை ஆட்சி செய்து வந்த தமிழ், சிங்கள மன்னர்கள் எமக்குக் கீழ்ப்படிந்து சரணடைந்தார்கள். இன்னும் தகுதி வாய்ந்த பறங்கியர்களும் எமது வல்லமையை அறிந்து முறையோடு இந்த நாட்டை ஆட்சி செய்யுங்கள் என்று தந்துவிட்டு ஓடிவிட்டார்கள். அப்படியான எங்கள் அதிகாரத்தை அறிவீர்களோ? என்று கூறி மேலும் சொல்லுகிறார்கள்.

எமது அரச சட்டத்திற்கு மாறாக வல்லமை கொண்ட திறமையோடும், துணிவோடும் எங்கள் துரைத்தனத்திற்கு மதிப்புக்கொடாமல் ஒன்றல்ல பலவிதமான பண்டங்களும், பொதி மாடுகள், வண்டிகள் என்பவற்றோடும் மக்கள் கூட்டத்தோடும் இவ்வாறு வந்து இங்கே தங்கி நின்று உங்கள் தேவதை என்ற பசாசுகளை வைக்கவும் என்ன தைரியம் உங்களுக்கு?

இங்கே உணவு சமையல் செய்வதற்கு உங்களின் விருப்பம் போல ஊர்தோறும் போய் பொருட்கள் சேர்ப்பதற்கும் இது ஒரு உபாயமாக எண்ணாதீர்கள். பசாசுகளை கடவுள் என்று கூறிக்கொண்டு இவ்வாறு ஊர் சுற்றி வருவதற்கு எங்களுடைய ஆட்சியின் கீழ் உங்களுக்கு அனுமதி கொடுத்தது யார்? அப்படி ஏதும் இல்லை எனில் தகுந்த தண்டனைக்கு ஆளாவீர்கள். அதுமட்டுமல்ல, தண்டனைப் பணமாகவும் செலுத்தும் படி நாம் கட்டளையிடுவோம். இதிலிருந்து தப்ப முடியாது. இப்படியான பூசைகளும், ஆலயத்தொண்டுகளும் மற்றயவையும் செய்யாதீர்கள். பாசத்தைக் கொடுக்கின்றதாகிய பசாசுகளைத் தெய்வம் என்று வணங்காதீர்கள். உண்மைக் கடவுளாகிய யேசுநாதரின் அன்புகொண்ட சத்திய வேதத்தில் சேருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் எல்லோரும் இறந்து போகும்படி துப்பாக்கியால் நானே சுட்டுவிடுவேன் என்றான்.

இதை அந்த ஒல்லாந்த அதிகாரி சொல்லிக் கண்ணிமைக்கின்ற நேரத்திற்குள் பூசகர் சொல்கிறார் உண்மையை நான் கூறுகின்றேன் அறிந்து கொள்ளுங்கள். புளியம்பொக்கணை என்ற ஊரில் உற்பவமாகி எழுந்தருளியிருந்து அடியவர்க்கு அருள் செய்கின்ற கடவுளை ஆண்டுதோறும் பல ஊர்களுக்கு எடுத்துச் சென்று அங்கெல்லாம் காணிக்கைப் பொருட்களை சேகரிப்பது எம் முன்னோர் செய்து வந்த வழக்கம். அப்போது ஊர்மக்களும் கூடி வரிசை, வாத்தியத்தோடு வருவதும் பண்டைக் காலத்து நடைமுறை ஆகையினால் எங்கள் குலதெய்வத்தின் பொங்கல் விழாவை முன்னிட்டு தீங்குகள் எதுவும் நேராவண்ணம் ஊரெல்லாம் கொண்டு சென்று அடியவர்களின் நேர்த்திப் பொருட்களையும், காணிக்கை களையும் ஏற்று, எமது ஊருக்குத் திரும்பிப்போய் குறை ஒன்றும் ஏற்படாவண்ணம் பொங்கல் செய்வோம். இது இன்று நேற்றல்ல முற்காலத்திலிருந்தே வந்த முறைமை அதையே நாமும் செய்து வந்தோம் என்றார் பூசகர்.

நீர் சொல்வது உண்மையெனில் உங்கள் குலதெய்வம் என்று நீர் குறிப்பிட்டது என்ன கடவுள் சொல்லுமென்று கேட்க பூசகர் சொல்கிறார் எங்கள் தெய்வமானது உருவ அமைப்பில் ஒப்பற்றதாக விளங்குகின்ற பாம்புவடிவமாகும் என்றதும் அந்த அதிகாரி முன்பிலும் அதிக கோபம்கொண்டு என்னுடைய கேள்விக்குச் சரியான விடை தரவேண்டும் இல்லையெனில் உங்கள் ஒருவரையும் தப்பிச் செல்ல விடமாட்டேன் என்று கூறுகின்றான்.

பின்பு வீணான வார்த்தைகள் பேசிநடப்பதென்ன நீங்கள் வணங்குகின்ற தெய்வமாகிய பாம்பை எமது முன்னிலையில்

வெளிப்படையாக காண்பிக்க வேண்டும். இல்லையெனில் இங்கே இருக்கின்றகூட்டத்தைக் கலைத்து இங்கிருக்கின்ற உணவுப் பண்டங்கள், பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்தெறிந்து விடுவோம். இதோடு விடமாட்டோம், இங்கிருக்கின்ற ஆண்கள், பெண்கள் எல்லோரையும் துரத்திவிடுவேன். இதை நன்கு புரிந்து கொள்ளுங்கள் என்றான்.

மேலும் அந்த ஒல்லாந்த அதிகாரி கூறுகின்றான் எங்கள் ஆணையின் படி உங்கள் தமிழ்ப்பகுதியில் உள்ள சைவக் கோயில்கள் எல்லாம் இடித்துக் கொட்டிவிட்டோம். இந்த பூமியிலுள்ளவர்களது பாவத்தைப் போக்குவதற்கு மனித குமாரனாக வந்தவதரித்த பரமண்டலத்தில் இருக்கும் பிதாவாகிய யேசுநாதரின் சத்திய தேவமார்க்கத்தில் சில தமிழர்கள் முன்பே சேர்ந்து விட்டார்கள். நீங்கள் மட்டும் இப்படியான சமயக்குற்றத்தைச் செய்வது முறையல்ல என்று சொல்லும் சமயத்தில் அர்ச்சகரானவர் மிகவும் பயந்து இந்தச் சிவநிந்தனையாகிய வேதனை என்ன காரணத்திற்காக எம்மை வருத்துகின்றது என மனதில் மிகவும் வருத்தம் கொண்டு இப்புறச் சமயவாதியாகிய அதிகாரிகட்கு எவ்வாறு ஒரு உறுதியான விடையைக் கூறுவோம் என்று எண்ணித் தெய்வாதீனமாகப் பின்வருமாறு கூறுகின்றார்.

அந்த ஒல்லாந்த அதிகாரியைப் பார்த்து இந்த பூமியில் உள்ளவர்கள் எல்லோரும் வணங்கிப் போற்றும் படியான எம்பெருமானை நினைத்து இந்த இடத்திலே பூசை செய்கின்றேன். அந்தநேரத்தில் பெருமை மிக்க எங்கள் பாம்புத் தெய்வமாகிய நாகதம்பிரானை நீங்கள் கண்ணாலே காணும் பொருட்டும் எமது சமய உண்மைகளை அறியும் பொருட்டும் நேராகக் காட்டுவேன் என்று கூறித் துணிவோடு எழுந்து சென்று அங்கே காணப்பட்ட நீர்த்தடாகத்தில் தோய்ந்து தினமும் செய்யப்படுவதாகிய நித்திய அனுட்டானத்தையும் நன்றாக முடித்து, பெருவிருப்பத்தோடு குற்றவேல் செய்வதற்காக காத்திருந்த அடியவர்களைப் பார்த்து பின்வருமாறு உத்தரவிட்டார்.

எம்பெருமானுக்கு பூசை செய்வதற்குத் தேவையான பூசனைப் பொருட்களையெல்லாம் தவறாது அன்போடு கொண்டுவந்து தாருங்கள் என்றார். முறைதவறாது சூடம் மற்றும் வாசனைத் திரவியங்கள் போன்றன எல்லாவற்றையும் ஒரு சேரக்கொண்டு வந்து வைக்க பூசகர் அப்போது ஒளி விளங்கும் வண்ணம் இவ்வாறு செய்தார். வெள்ளை என்ற வெண்ணிறமுடைய நல்ல துணியொன்றை எடுத்து விரித்து அதன்மேல் இளம் பிறைச்சந்திரனை அணிந்து அழகிய சடாமுடியையுடையவராகிய சிவ பிரானை நேர்ந்து கொண்டு வந்ததாகிய வெள்ளிகட்டிய பிரம்பையும் பொலிவாகிய

திருவருளையுடைய குலதெய்வமாகிய நாகதம்பிரானை மனதில் நினைத்தடி அங்கே கொண்டுவரப்பட்ட நாகபடத் திருவுருவையும் வைத்தார்.

அதன் பின்பு மனப்பரிவோடு வளந்து என்று சொல்லப்படுகின்ற புதுப்பானை ஒன்றை எடுத்து முழுமையான அன்போடு கழுவி அந்த வெள்ளை விரிப்பின் மீதுள்ள நாக படத்திருவுருவுக்கு முன்பாக வைத்த வேறு ஒரு வெண்பட்டை எடுத்து எல்லோரும் காணும்படியாக முறுக்கி அங்கே வைக்கப்பட்டிருந்த வளத்தினுள் வைத்தார். தொடர்ந்து சந்தனம், புனுகு, சவ்வாது, பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களும், குங்குமம், கரிய அகிலும் மற்றும் பூசைக்கு ஏற்றதாகிய கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றோடு பூசனை செய்வதற்குரிய

ஏனைய பொருட்களையெல்லாம் முறைப்படி எடுத்து வைத்து, சுத்தமாகிய பசுவின் பால், தயிர், நெய், தேன், இளநீர் போன்ற அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்து ஆகம சாத்திரங்களை அறிந்த பெரியோர்கள் விதித்தபடியே அந்தத் தம்பிரான் திருவுரு மீது அன்றலர்ந்த பூக்களை பூமாலையாகச் சாத்தினார்.

தொடர்ந்து வாழைப்பழம், பலாப்பழம், மா ஆகிய முக்கனிகளும், வெற்றிலை, பாக்குடன் அவிப்பாகங்களையும் அந்த வெள்ளை விரிப்பிலே வைக்கப்பட்ட திருவுருவத்தின் திருமுன்னிலையில் குவியலாகப் படையல் செய்து, உள்ளொளி விளங்க மனம் கசிந்துருகி முதற்கடவுளாகிய விநாயகப்பெருமானை முதலில் வணங்கிய பின்பு பேரன்போடு நெய்வேத்தியம் வைத்து கற்பூரதீபம் ஆகியவற்றால் முன்னின்று வலமாகச் சுற்றிக்காட்டி, விதிமுறை தவறாது மிகவும் நம்பிக்கையோடு எம்பெருமானுக்கு அர்ச்சனையும் செய்தார்.

இவ்வாறு பூசை செய்து கொண்டு மனதார வேண்டுகின்றார். எங்கள் குலதெய்வமாகிய நாகதம்பிரானே! நினைத்த திருவுருவத்தைக் கொண்டு எழுந்தருளுகின்ற சிவபெருமானே! உங்களது அற்புதமான பெருமையும் புகழும் சிறிதேனும் அறியாத பிறச்சமய வாதியராகிய இந்த ஒல்லாந்த அதிகாரிகள் கண்டு திடுக்கிடும் படியாகவும், பூமியிலுள்ளவர்கள் புகழ்ந்து போற்றிடவும் ஐந்து தலைகளையுடைய பாம்பாகத் திருவுருவெடுத்து எங்கள் முன்னிலையில் வரவேண்டுமென்று உள்ளம் உருகி வணங்கினார் பூசகர்.

அதுமட்டுமல்லாமல் ஐந்து புலன்களும், ஒடுங்கி நிலைப்பட்டு திருமுன்னிலையில் நின்று இரண்டு கண்களிலும் நீர் சொரிய

அடர்ந்த ரோமம் சிலிர்க்க மனதார கைகூப்பி வணங்கி இறைவன் புகழ் கூறுகின்ற தோத்திரங்களைப் பாடுகின்றார். காசிபமுனிவரது தர்மபத்தினியாகிய கத்துருவின் வயிற்றில் தோன்றி விருப்பத்தோடும் வளர்ந்த பெருமானே வணக்கம். நினைந்து வணங்குகின்ற மெய்யடியார்க்கெல்லாம். எளியவராய் வந்து அருள்புரிபவரே வணக்கம், நிலையாக எம்மோடு ஒன்றாக வளர்ந்த பேரொளி பொருந்திய சர்ப்பதேவரே வணக்கம். எங்கள் முதல்வனே வணக்கம்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து இயற்கை சக்திகளாற் பொருந்தியிருக்கின்ற கீழ் மேலாகவுள்ள ஏழேழு பதினான்கு உலகங்களையும் ஒப்பற்ற வடிவடைந்த உமது தலையினாலே சுமந்து முறைதவறாது தாங்குகின்ற ஆதிமூர்த்தியே வணக்கம், வணக்கம். வேதத்தின் உட்பொருளாய் விளங்குகின்ற பெருமானே வணக்கம். அடியார்க்கு திருவருள் புரிகின்ற தெய்வமே போற்றி. திருக்கோயில் அமைவதற்கு காரணமாக இருந்த உருவே போற்றி. கிருபா சமுத்திரமே போற்றி. பெரிய துன்பம் வந்திடா வண்ணம் வணங்குகின்ற அடியார்க்கு வேண்டியதைக் கொடுக்கின்றவரே வணக்கம். பரிபூரணமாகி அமர்ந்தருளும் தர்மசொருபரே வணக்கம்.

முன்னொரு காலத்திலே மகாமேரு மலையின் கொடுமுடிகளை பனாமகுடத்தினால் மறைத்து அழகு பொருந்திய வாயுதேவனோடு போட்டியிட்ட பெருமானே போற்றி. இப்போது இந்த வேறு சமயத்தைச் சேர்ந்த ஒல்லாந்த அதிகாரிகள் நேரே காணும்படி இந்த இடத்தில் ஒரு பாம்பு வடிவமாக வராது விடில் எளியேனது உயிர்க்கு இன்றே முடிவாகும். இது உனது புகழுக்கு ஏற்றதாகுமோ?

ஆன்மா நாயகராகிய சிவபெருமான் முப்புரங்களை எரித்த போது மாமேருவாகிய வில்லிற்கு நாணாக விளங்கினீர். குற்றமற்ற நெடிய வடிவினையுடைய மகா விஸ்ணுமூர்த்திக்கு நல்ல பாயலாயினீர். சமானமற்ற அமிர்தத்தைக் கடைவதற்கு மந்தரமாகிய மத்து இழுக்குங் கயிறாகினீர். இந்த பூமியிலுள்ள எல்லோரும் வணங்கிட எங்கள் குலத்துள் அவதரித்து தெய்வமாகினீர்.

ஆயிரம் தலைகளை மறைத்து ஐந்து தலையாய் அளந்தீர். பின்பு விருப்பம் பொருந்திய ஒரு தலையோடு பெருத்த பூமியில் திரிகின்ற முதல்வரே வணக்கம். இங்ஙனம் அளவிலடங்காத தேவரீருடைய பெருமையைச் சிறியோனாகிய என்னால் அறிந்து கூறமுடியுமோ? முடியாதே. தீவினையுடையவனாகிய எனது இத்துன்பம் நீங்கும் பொருட்டு சிறிது திருவருள் பாலித்துக் காத்தருள்க.

மகா விஸ்ணுமூர்த்தி பிரமதேவர் ஆகியோர்க்கும் அரிய கடவுளே வணக்கம். சந்திரனையும், கங்கையையும் சடா முடிமேல் அணிந்தவரே வணக்கம். இயமதர்மராசனைக் காலால் உதைத்தவரே வணக்கம். மன்மதனை எரித்து அழித்த இறைவா வணக்கம். ஆலகாலத்தையுண்ட ஐயா வணக்கம், இந்த பூமியில் திரிகின்ற முதல்வரே வணக்கம். இங்ஙனம் அளவிலடங்காத தேவரீருடைய பெருமையைச் சிறியோனாகிய என்னால் அறிந்து கூறமுடியுமோ? முடியாதே. தீவினையுடையவனாகிய எனது இத்துன்பம் நீங்கும் பொருட்டு சிறிது திருவருள் பாலித்துக் காத்தருள்க.

சத்துராதிகளிடமிருந்து முப்புரத்தை எரித்தழித்தீர். எதிர்த்து வந்த புலிமுகாசுரனது தோலையுரித்து உடுத்தருளினீர். போட்டியிட்டு இறுமாந்து நின்ற காளியோடு நடனமாடி வென்றீர். இப்போது வேறு சமயத்தவர்களாகிய ஒல்லாந்த அதிகாரிகள் தமது அகங் காரத்தினாலே தேவரீரை அவமரியாதை செய்கின்ற தீமையைப் பொறுக்கமாட்டோம். இந்தக் கொடுமையிலிருந்து நீங்கி எம்மை இரட்சிப்பீராக. என்றவாறு பல துதிகளைப் பாடி வணங்குதல் செய்ய பூசகரின் பக்கமாக நெருங்கி நின்ற அன்பர்கள் கண்டு உளமுருகி போற்றி செய்ய ஒல்லாந்த அதிகாரிகள் கண்ட மாத்திரத்திலே மனம் நடுங்கி அச்சம் கொள்ள சபதத்தில் வெற்றி கண்ட பூசகரும், வியப்புற்று அதிக சந்தோசம் கொள்ள முன்பே வெள்ளைத்துகில் மீது நேர்ந்து வைத்த வளத்தினுள்ளேயிருந்து ஐந்துதலை நாகப்பாம்பாக வெளியே தோன்றி தனது அகன்ற படத்தை விரித்து ஆடியது.

இந்த அதிசயமான அற்புதத்தைக் கண்ட மாத்திரத்திலேயே பகைவர்கள் போல் எம்பெருமானையும் சைவசமயத்தையும் அவமதிப்பு நின்ற ஒல்லாந்த அதிகாரிகள் திடுக்கிட்டு கண்பார்வை மழுங்கிப் பார்க்கமுடியாது கூசினர். தேவரீர் கொண்டுள்ள அளவில்லாத பெருமையைச் சிறிதளவேனும் அறியாது நிந்தனை செய்த சிறியவர்களாகிய எமது குற்றத்தை பொறுத்தருள வேண்டுமென்று கேட்டு தாமும் தொண்டர்கள் போல் மனமுருக பூசகரோடு சேர்ந்து தாமும் வீழ்ந்து வணங்கி கைகூப்பி நின்றார்கள்.

இவ்வாறு நிகழ்ந்த பின்னர் அந்த ஒல்லாந்த அதிகாரியானவன் தான் கண்முன்னே கண்டு தரிசித்த பாம்பினது உருவைப் போல அழகிய கையினாலே சித்தரித்துக் காட்ட, திட்ட வெளியாக நின்றாடிய நாகபாம்பானது மறைந்தருளியது. இந்த அற்புதத்தைப் பார்த்து நின்ற அந்த ஒல்லாந்த அதிகாரிகள் நாங்கள் பொங்கல் தினத்தன்று தங்களின் கோயிலுக்கு வருவோம். நீங்கள் இங்கிருந்து எவ்வித

இடையூறும் இல்லாமல் செல்லுங்கள் என்று அனுமதி கொடுத்துச் சென்றார்கள். இதன் பின்பு ஒல்லாந்த அதிகாரிகளால் தீங்கு எதுவும் நேராவண்ணம் தக்க தருணத்திலே அரவுருவாகக் காட்சித்தந்து தம்மைக் காத்தருளிய எம்பெருமானது திருவருளினை நினைந்து பூசகரும் மற்றைய திருத்தொண்டர்கள், மெய்யன்பர் எல்லோரும் ஊற்றெடுக்கும் பேரன்போடு வணங்கி நின்றார்.

ஒல்லாந்த அதிகாரிகள் அங்கே வருவதற்கு முன்னர் தாங்கள் செய்து கொண்டிருந்த பூசையினைத் தொடர்ந்து செய்து முடித்தும், மரவடியில் செய்ய வேண்டிய மற்றைய காரியங்கள் எல்லாவற்றையும் ஒன்றும் தவறாமல் செய்துமுடித்து அன்னதானத்தையும் நிறைவு செய்து கொண்டு பூசகரும் அடியவர்களும் ஒருமித்து எழுந்து எம்பெருமானின் திருவருளை எண்ணித் துதித்து தெய்வீக உருவமாகிய நாகபடத்தோடு வெள்ளி கட்டிய பிரம்பையும் பண்டச்சாமான்களையும் கொண்டு புறப்பட்டு, எம்பெருமான் திருக்கோவில் அமைந்துள்ள புளியம்பொக்கணை என்ற நல்லூரைச் சென்றடைந்து பொலிவோடு திகழ்கின்ற தம்பிரான் கோவிலில் பங்குனி உத்தரப் பொங்கல் விழாவைச் செய்தனர். அன்றைய தினத்தில் முன்பு கூறியது போல் ஆலயத்திற்கு அந்த ஒல்லாந்த அதிகாரிகளும் வந்து சேர்ந்தனர்.

இவ்வாறு அங்கு வந்த அதிகாரிகள் ஆலய வாசலில் நின்ற வண்ணம் பூசகரை வரவழைத்தனர். வரவழைத்து பண்டமரவடியாகிய மடுக்கரை என்ற இடத்தில் தாம் கண்ட பாம்பின் உருவத்தை அதாவது ஐந்து தலைப் பாம்பினுடைய வெள்ளியினால் செய்யப்பட்ட படத்தையும் கொடுத்து அந்தப் புராதன ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு ஏற்ப மூலதனமாகப் பணமும் கொடுத்து விடைபெற்றுச் சென்றார்கள். அன்று தொட்டு அந்த வெள்ளி நாகபடத்தையும் வைத்து பூசையினை செய்து வருகின்றார்கள். எக்காலமும் தவறானது ஏற்படாத வண்ணம் எண்ணுதற்கரிய பூசை, பொங்கல் விழா என்பவற்றை அந்த நீதிநாயகமுதலியாரின் சந்ததியில் வந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக முறைப்படி பூசகர்களாகி பெருவிருட்சமாகி நிற்கும் அரசம் பொந்தில் உறைகின்ற பாம்புத், தெய்வமாகிய நாகதம்பிரானுக்கு வேண்டும் நிவேதமாகப் பாலும் பழமும் பக்தியோடு வைத்து, இன்று வரை தவறின்றி பூசித்து நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் வண்ணம் திருத்தொண்டாற்றி வருகின்றார்கள்.

# நீதி நாயக முதலிய வம்ச வழித்தோன்றிய பூசகர்கள்

- ஆறுமுகம்
- சின்னையா
- நமசிவாயம்
- நாகமுத்து
- நமசிவாயம்
- வீரகத்திப்பிள்ளை - (ஐங்கரப்பிள்ளை)
- சிதம்பரப்பிள்ளை
- சுப்பிரமணியம் - (மணியம்)

# தலபுராணத்திலிருந்து

*அன்றுதொட்டின்று மேற்ற வதிசயம் புதுமையாய் முன்*
*சென்றிடு புதூரினுற்றார் தொழத் தகும் தெய்வமாகி*
*நன்றிய லுருவங் காட்டி நாட்டுளோர்க் கங்கு மிங்கும்*
*நின்றருள் புரியு மாதி நிமலனே போற்றி போற்றி*

*அந்தண ரறந்த ழைக்க வரசர் செங்கோல்விளங்கச்*
*செந்தமிழ் சைவ மோங்கச் செழுமுகில் பொழிந்து தேங்கப்*
*பைந்தொடி மாதர் கற்புப் பரித்திட்டப் பவங்கணீங்க*
*வந்தனை புரியும் நாக தம்பிரான் வாழ்க வாழி*

*அருகினைங் கரனும் வாழ்க வறுமுக வமலன் வாழ்க*
*திருநிறையுருவின் வைகுஞ் சிவனுமை யருளும் வாழ்க*
*மருவியோர் பக்கமுற்ற வயிரவர் மகிழ்ந்து வாழ்க*
*பெருவில் சீரடியார் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.*




அச்சுப்பதிப்பு:மாறன் மல்ரிகலர் பதிப்பகம்,கிளிநொச்சி -0775562963